ஈழத்துக் காரைநகர்

# திக்கரை முருகன் திருத்தலப் பாமாலை




இயல் இசை வாருதி, யாழ்ப்பாணம்

பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்

# திக்கரை முருகன்
# மகா கும்பாபிஷேகம்

ஈழத்துக் காரைநகர் திக்கரை முருகமூர்த்தி ஆலய

## மகா கும்பாபிஷேகம்

விரைவில் நடைபெற முருகன் அருள் கிட்டியுள்ள தென்பதனை அடியார்களுக்கும், அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் தெரியத் தருவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

## இராஜகோபுரம்

வேலைகள் துரிதகதியில் நடைபெற்றுப் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன. நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவும் பட்சத்தில் எமது எதிர்பார்ப்புக்கு அமைய மிக விரைவில் இவ்விழா வெகு சிறப்பாக நடைபெறும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இராஜகோபுர வேலைகள் பூர்த்தியாகிக் கும்பாபிஷேகத்துக்கான நாள் நிருணயம் செய்யப்பட்ட உடன் அடியார்களுக்கும், அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் விவரம் தெரியத் தரப்படும் என்பதனை அன்புடன் அறியத் தருகிறோம்.

**திக்கரை முருகன் தேவஸ்தானம்**

***காரை நகர், ஈழம், இலங்கை.***

[illegible]

# ஸ்ரீ [illegible] முருகன்

# [illegible] பாமாலை



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஈழத்துக் காரைநகர்

# திக்கரை முருகன் திருத்தலப் பாமாலை




ஆக்கம்
இயலிசை வாருதி, யாழ்ப்பாணம்
**பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்**

தொகுப்பு
தமிழ்நெறிக்கிழார்
**பொன். பாலசுந்தரம்**



பதிப்பு
சிவா திருநாவுக்கரசு மகேசன்

வெளியீடு
**திக்கரை முருகன் தேவஸ்தானம்**
**காரைநகர், ஈழம், இலங்கை**
2006

## நூல் விவரம்

தலைப்பு : *திக்கரை முருகன் திருத்தலப் பாமாலை*

ஆக்கம் : பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்

தொகுப்பு : தமிழ்நெறிக்கிழார் பொன். பாலசுந்தரம்
214 Demesne Road, Wallington,
Surrey SM6 8EN, United Kingdom.

பதிப்பாளர் : சிவா திருநாவுக்கரசு மகேசன்
16, Brookfields Avenue, Mitcham,
Surrey CR4 4BN, United Kingdom.

பதிப்பு : முதல் பதிப்பு, தி.ஆ. 2037 சித்திரை
ஏப்பிரல், 2006

அளவு : டெமி (14 x 21 செ.மீ.)

பக்கம் : 120

படிகள் : 1000

அச்சிடலும் உருவாக்கமும் : **உலகத் தமிழர் பதிப்பகம்**
4, சௌராட்டிரா நகர் 7ஆம் தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
பேசி : 0091 44 55180155 / 9444111951
மின்னஞ்சல் : eramathi@rediffmail.com

வெளியீடு : **திக்கரை முருகன் தேவஸ்தானம்,**
காரைநகர், ஈழம், இலங்கை.

| |
|---|
| பாமாலைப் பாடல்களை<br>முருக பக்தர்கள் பயன்படுத்தலாம் |
| உலக நாடுகளில் உள்ள<br>சைவத் திருத்தலங்களிலும் கிடைக்கும் |

ஈழத்துக் காரைநகர்
திக்கரை முருகன் அந்தாதிக் கீர்த்தனைகளைத்
திக்கரை முருகனின் மலர்ப் பாதங்களில்
சமர்ப்பணம் செய்த

இயலிசை வாரிதி, கவிமாமணி,
ஸாகித்ய ஸாகரம், ஸாகித்ய மாமணி,
ஸாகித்ய சிரோமணி, முத்தமிழ் வாரிதி,
ஸாகித்ய லகரி, ஸ்ருஷ்டி ஞாயிறு



யாழ்ப்பாணம்

பிரம்மஸ்ரீ **ந. வீரமணி ஐயர்** அவர்கள்

# முன்னுரை

தமிழ்நெறிக்கிழார்
பொன். பாலசுந்தரம்



பக்தி மயமான எமது சமயத்தையும், மொழிகளில் முதல் மொழியான தமிழ்மொழி யையும் காலச் சக்கரத்தின் விபரீதச் சுழற்சியிலிருந்து காப்பாற்றிய பெருமைக் குரியவர்கள் எமது முன்னோர்கள். எதையும் ஆவணப்படுத்தும் மனவலிமையினால்தான் இதனை அவர்களால் சாதிக்க முடிந்தது.

அந்தப் பெருமைக்கு உறுதுணையாக இருந்தது அவர்களது சமயப்பற்றும், தமிழ்ப் பற்றுமாகும். இவற்றைப் பேணிப் பாதுகாத்து, வளர்த்து வருவதில் அவர்கள் சாதனை படைத்தவர்கள். பெரிய புராணத்தை அதாவது நாயன்மார் வரலாற்றை ஆவணப் படுத்தி எமக்குத் தந்திருக்காவிட்டால் சமயத்திலுள்ள பெருமையைப் பேசும் வாய்ப்பை நாம் இழந்திருப்போம். காலத்தை வென்ற காப்பியமாக நிலைத்திருக்க எதனையும் ஆவணப்படுத்தியாதல் வேண்டும் என்பதற்கு இதுவே போதுமான உதாரண மாகும்.

எமது பாரம்பரியத்தை, சமயத்தை, மொழியை கற்சாசனங்கள் மூலம் அறிந் தோம். தொடர்ந்து செப்பேடுகள் கூறின. பின்னர் தங்கத் தகட்டிலும் பனை ஓலை ஏட்டிலும் பார்த்தோம். இப்போது அச்சுப் பதித்துப் பார்க்கிறோம். இது காலப் போக்கில் ஏற்பட்ட மாற்றம்.




நமது ஆலயங்களின் ஊஞ்சல் பாடல்கள், பக்திப் பாடல்கள், கீர்த்தனைகள், அந்தாதிப் பாடல்கள் போன்றவை பழைமையும், பெருமையும் நிறைந்த தகவல்களைக் கொண்டவையாக இருப்பதனைப் பார்க்கிறோம். இவற்றை எல்லாம் ஆவணப்படுத்தி வைக்கவேண்டியது நமது கடமையாகும். எம்மைப் பற்றி எமது வருங்காலச் சந்ததியினர் அறிவதற்கு இவை அவசியம் தேவை.

எமது மத்தியில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையால் எதனையும் ஆவணப்படுத்தாமல் இருந்துவிட்டோம். ஆனால், இன்று ஆவணப் படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கம் நமது மக்கள் மத்தியில் பிறந்திருப்பது ஒரு வரவேற்கத்தக்க திருப்பமாகும்.

ஈழத்துக் காரைநகரிலுள்ள திக்கரை முருகன் திருக்கோயிலின் தொண்டரான திரு. சிவா திருநாவுக்கரசு மகேசன் அவர்கள் திக்கரை முருகன் கீர்த்தனைகளையும், கோயில் சம்பந்தமான மற்றப் பாடல்களையும் அச்சுப் பதித்து ஆவணப் படுத்த முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது. இந்தப் பெருமை காரைநகர்வாழ் மக்களையும் சார்ந்ததாகும்.

திக்கரை முருகன் திருத்தலப் பாமாலையில் அற்புதமான நூறு கீர்த்தனைகளை அமரர் இயலிசை வாருதி யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் பாடிக் கொடுத்திருக்கிறார்கள். ஐயர் அவர்களது பாடல்கள் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் இன்றும்




ஒலிப்பதனைக் கேட்கலாம். "கற்பக வல்லியின் பொற்பதங்கள்" என்ற பாடல் இந்தியாவில் நடைபெறும் நடன அரங்கேற்றங்களில் எல்லாம் ஒலித்துக்கொண்டிருப்பதனைக் கேட்கலாம். இப்படிப் பெருமை வாய்ந்த ஐயர் அவர்கள் திக்கரை முருகனைப் பற்றிப் பாடியிருப்பது எமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

ஒரு நாட்டின், நகரின், கிராமத்தின் சரித்திரத்தை, வனப்பை, வளத்தை, வாழ்க்கை முறையைச் சம்பிரதாயங்கள் உள்ளிட்ட சடங்குகளை, வழிபாட்டை அறிவதற்கு இப்படியான திருத்தலப் பாடல்கள் உதவியாக இருப்பதனால் எல்லா ஆலயங்களும் தம் வசமுள்ள திருத்தலப் பாடல்களை ஆவணப்படுத்துவது சாலச் சிறந்ததாகும்.

காரைநகர் மக்கள் எதிலும் முன்னோடிகள். அதற்குப் பெருமை தருவதாக அன்பர். சிவா மகேசன் அவர்களின் முயற்சியால் திக்கரை முருகன் திருத்தலப் பாமாலை புத்தக வடிவு பெறுகிறது.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் இறைவன்பால் உள்ளம் உருகிப் பாடிய பாடல்கள் ஏராளம். அவற்றுள் ஒன்றுதான் திக்கரை முருகன் திருத்தலப் பாமாலை. இவற்றை அன்னார் 1953ஆம் ஆண்டில் ஆக்கம் செய்திருந்தார்கள். அவற்றைத் தனி ஏடாகப் பதிப்பிக்க வேண்டுமென்ற முருகனின் ஆணை இப்போதுதான் நிறைவேறுகிறது. எல்லாம் திக்கரை முருகனின் ஆணைப்படிதான் நடக்கும். முருகனை நேரில் பார்ப்பது



போன்ற உணர்வைக் கீர்த்தனைகள் ஏற்படுத்திப் பக்தி மயமாக்கிவிடுகின்றன. படித்துப் பயன் பெறவேண்டியது அடியார்களின் கடமையாகும்.

பாமாலைக்கு முகவுரை எழுதவும், வடிவமைக்கவும், புத்தக வடிவில் உருவாக்கவும் எனக்கு வாய்ப்பைத் தந்த எல்லாம் வல்ல தமிழ்க் கடவுளாகிய திக்கரை முருகனுக்கு முதல் வணக்கம்.

அன்பர். சிவா மகேசன் அவர்களுக்கும், சைவமும், தமிழும் பேணும் திக்கரை முருகன் அடியார்களுக்கும், ஆலயத் திருப்பணிச் சபையினருக்கும் "முருகா என உனை நினைந்தோதும் தவத்தினர் மூவுலகிலும் அருகாத செல்வமடைய" அருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து முன்னுரையை நிறைவுசெய்கிறேன்.

வணக்கம்.

மார்ச்சு 2006

214 DEMESNE ROAD
WALLINGTON
SURREY SM6 8EN
UNITED KINGDOM
Phone : 0208 395 8013
0208 773 0047

# திக்கரை முருகன் திருத்தலம்

சிவா திருநாவுக்கரசு மகேசன்

கண் தந்த கடவுள் எனப் பக்தர்கள் மனத்தில் குடிகொண்டிருக்கும் முருகன்.

கண்களைத் தந்து அவற்றைக் கண்கண்ட கடவுள் எனப் போற்றப்படும் முருகன். பக்திப் பார்வையில் கூறுவதென்றால் உண்மையில் கண்கண்ட கடவுள்தான் இந்தத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் முருகன்.

இரட்டைக் குதிரைகள் கொண்ட வாகனத்தைக் காணிக்கையாகக் கொடுத்து முருகனை அந்த வாகனத்தில் எழுந்தருளச் செய்த பக்தர் ஒருவருக்கு இரட்டைக் குழந்தைகளின் மகப்பேற்றைக் கொடுத்த அற்புத முருகன்.

நமக்குத் தெரிந்த கோயில்கள் பலவற்றுள் அக்கோயிலொடு புராணக் கதைகள் பிணைக்கப்பட்டிருப்பதனைக் கேள்விப்பட்டிருக்கிறோம். மற்றும் சில கோயில்களுடன் கர்ண பரம்பரைக் கதைகள் வளர்ந்திருப்பதனையும் நாம் பார்த்திருக்கிறோம். இன்னும் சில கோயில்களில் நமது வாழ்க்கையோடு இணைந்துள்ள அற்புதங்களைப் பற்றியும் அறிகிறோம்.



தமிழர்களுடைய நாகரிகத்தைச் சைவக் கோயில் நாகரிகம் எனலாம்.

கோயில்களைச் சார்ந்து வாழும் குடிகள், அக் குடிகளைச் சார்ந்து வாழும் கோயில்கள். குடிகளைச் சார்ந்து வாழும் கோயில்கள் என்பதிலும் பார்க்க குடிகளைத் தாங்கி வாழும் கோயில்கள் என்றும் கூறலாம்.

கோயில் இல்லாத ஊரில் குடியேறிப் பழகாதவர்கள் தமிழர்கள். அவன் அருளாலே அவன் தாளை வணங்க அவனைத் (கடவுளை) தம்மோடு அணைத்துக்கொண்டவர்கள் தமிழர்கள். உலகத்தில் மற்ற எந்தச் சமயத்தவருக்கும் இல்லாத சமயப் பற்று இதுவாகும்.

எமது சமயம், கலை, கலாச்சாரம், பண்பு, பாரம்பரியம், அனுட்டானங்கள் உட்பட இன்னும் நமது வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து

வளர்ந்து வரும் பழக்கங்களுக்குப் பாதுகாப்பு மையமாகவும் கோயில்கள் இருக்கின்றன. இவையெல்லாம் எமது கோயில் களின் பாரம்பரியமாகும்.

மக்களின் வாழ்வில் நலமும், வளமும், மனச் சாந்தியும், பக்குவமும் தருபவையாகக் கோயில்கள் இருப்பதனால்தான் அவற்றுடன் மக்களுக்குள்ள உறவு தொடர்பெல்லாம் கால மாற்றத்தால்கூட அழியாமல் இன்றும் நிலைத்திருக்கின்றன.

இந்தப் பாரம்பரியத்தில் வளர்ந்தவைதாம் ஈழத்திலுள்ள கோயில்கள். புனிதம் போற்றும் கோயில்களாக வளர்ந்தும், வளர்ந்துகொண்டும் திகழ்கின்றன. இந்து சமயத்தின் பிறப்பிடம் என்று கூறப்படும் இந்தியாவிலுள்ள ஆலயங்களிலும் பார்க்க புனிதம் போற்றப்படும் ஆலயங்கள் ஈழத்தில் உள்ளதாகப் பலர் கருதுவதனை நாம் அறிவோம்.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தமது பிரசங்கங்களில் இதனைக் கூறிவந்தமை பெருமை தருகின்றன.

இப்படிப் பெருமைக்குரிய ஆலயமாக ஈழத்துக் காரைநகர் - களபூமியில் அருள் பாலித்துக் கொண்டிருப்பவர்தாம் அருள்மிகு திக்கரை முருகமூர்த்தி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் திக்கரை முருகப் பெருமான்.

கோயில்களால் புனிதம் பெற்ற பூமி காரைநகர். அருள் வளம் பொங்கிப் பெருகும் பூமி. கோயில்கள் இல்லாத ஊரில் குடியேற மாட்டோம் என்ற மனத் துடிப்புடன் கோயில்களை அமைத்த பின்னர் அவற்றைச் சுற்றிவரக் குடியமர்ந்த பெருமைக்கு உரியவர்கள் நம் மக்கள்.



'சைவத்தையும்' தமிழையும் இரு கண்களாகக் கொண்டவர்கள் இப் பகுதிவாழ் மக்கள். இறைவனுக்குப் பணிபுரியும் இறை உள்ளம் படைத்தவர்கள். இதனால் கோயில்கள் வளரும் புண்ணிய பூமியாகக் காரைநகர் விளங்குகிறது. தில்லையில் நடராசர் திருக் காட்சி தந்த சிதம்பரத்தைப் பிரதிபலிக்கும் ஆலயம் ஈழத்துச் சிதம்பரமாக இங்கே தரிசனம் அளிப்பதனைக் காணலாம். அருளாட்சி ஓச்சும் முருகன் திக்கரை முருகமூர்த்தியாக இங்கிருந்து அருள் பாலிக்கிறார். சுமார்

முப்பத்தொரு திருத்தலங்கள் காரைநகரில் உள்ளதாக ஒரு கணிப்பு. அவற்றுள் விநாயகர் எழுந்தருளியுள்ள தலங்கள் எட்டு. சிவ ஆலயங்கள் இரண்டு. முருகக் கடவுளுக்கு ஏழு, காவல் தெய்வமான வைரவருக்கு ஐந்து, அம்பாளுக்கு ஏழு, ஐயனாருக்கு இரண்டு இப்படி முப்பத்தோர் ஆலயங்கள் உள்ளன.

இவற்றைவிட ஆங்காங்கே குல தெய்வங்களும் கோயில் கொண்டுள்ளனர். இவையெல்லாம் இப்பகுதிவாழ் மக்களின் இறைபக்தியின் மகிமையைப் பிரதிபலிக்கின்றன.

திக்கரை முருகனின் அதிசயங்கள் பற்றி ஆரம்பத்தில் கூறியிருந்தேன். அந்த நிகழ்வுகளைப் பற்றிச் சிறிது ஆராய்வது நல்லதென நினைக்கிறேன். ஆலயங்கள் என்றால் அங்கு சில அருட்காட்சிகள் நிகழ்ந்திருக்கும். மக்கள் அவற்றைக் கண்டும் கேட்டுமிருப்பார்கள். பரம்பரை பரம்பரையாகக் கூறப்பட்டு வந்தவற்றை அறிந்துமிருப்பார்கள். இதனால், திக்கரை முருகன் ஆலயத்தில் நடந்த அற்புதங்களை அடியார்களுடன் பகிர்ந்து கொள்வது இங்குப் பொருத்தமாக இருக்கும். அடியார்கள் எல்லோருக்கும் தெரிந்த அற்புதம் கண்பார்வை இழந்த கனக சபை காசிநாதர் என்னும் பக்தர் தாம் இழந்த கண்பார்வையை மீளப் பெற்றதுதான்! (அவர் ஒரு சிறந்த முருக பக்தர் என்பதனை யாவரும் அறிவர்). பார்வை இழந்த கண்களை நீயே மறுபடியும் கொடுத்தருள வேண்டுமென வேண்டி முருகனின் பாதாரவிந்தங் களில் தம்மை அர்ப்பணித்துவிட்டார். காசிநாதர் அவர்களின் நம்பிக்கை வீண்போகவில்லை. முருகன் அருளால் கண் பார்வை மீண்டும் கிடைத்துவிட்டது. இதற்கு ஒரு தொண்டாக முருகன் ஆலயத்தை ஊர்மக்களான முருகன் அடியார்களின் உதவியுடன் ஆகம விதிப்படி அவர் புனரமைப்புச் செய்து மகிழ்ந்தார்.



1880ஆம் ஆண்டுக் காலத்தில் இந்த அற்புதமும் ஆலயப் புனரமைப்பும் நடந்தமைக்குச் சான்றுகள் உள்ளன.

இதேபோலக் களபூமி முருகபக்தர் ஒருவருக்கு விவாகமாகியும் மகப்பேற்றுப் பாக்கியம் கிட்டவில்லை. இதனால் வேதனை யடைந்த இத்தம்பதியினர் நீதான் கதி எனத் திக்கரை முருகன் சந்நிதானம் சென்று அடைக்கலம்

புகுந்தனர். மகப்பேற்று வரம்வேண்டி முருகன் முன்னர் காதலாகிக் கசிந்துருகி நின்றனர். இரட்டைக் குதிரைகளைக் கொண்ட வாகனம் ஒன்றைக் காணிக்கையாகக் கொடுப்பதாகப் பிரார்த்தித்து விரதமிருந்தனர். முருகன் அனுக்கிரகம் கிடைத்தது. அத்தம்பதியினருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன.

இப்படி இன்னும் அனேக அற்புதங்கள் நடைபெறும் சந்நிதானமாகத் திக்கரை முருகன் ஆலயம் திகழ்ந்து வருகிறது. வர்த்தகர்கள், மாணவர்கள், விவசாயிகள் உட்படப் பலருக்கும் நலம்தரும் தலமாக இந்த ஆலயம் விளங்குகிறது.

இத்திருத்தலத்தின் தோற்றமும் புதுமையானது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் திக்கரைப் பகுதி வயல் ஒன்றில் வேல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுப் பின்னர் கொட்டில் ஒன்றமைத்து அந்த வேலாயுதம் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டதனை வாய்வழித் தகவல்கள்மூலம் அறிகின்றோம். இப்படி வளர்ச்சி யுற்ற திக்கரை முருகன் ஆலயம் இன்று ஈழத்திலுள்ள முருகன் ஆலயங்களுள் தலச் சிறப்புப் பெற்ற ஒன்றாக வளர்ந்திருப்பதற்கு முருகன் அருள்தான் துணை நின்றது. கோயில் வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட தகவல்களின்படி இக்கோயில் 1760ஆம் ஆண்டிற்குரிய ஒன்றெனக் கருதப்படுகிறது.

இப்போது அமைக்கப்பட்டுவரும் இராஜ கோபுரம் காரைநகரில் இத்தலச் சிறப்பில் புனிதமான வரலாறாக அமைந் துள்ளது. காரைநகர் கோபுர நகராக மலர்ந்து புதுப் பொலிவைத் தரும் பெருமை பெறுகிறது.



திக்கரை முருகன் பெருமை திக்கெட்டும் பரவும் வகை காண்பதில் சைவர்களாகிய நாம் எங்கிருந்தாலும் பெருமைப்படுவோமாக.

திக்கரை முருகன் திருத்தலப் பாமாலையை உரிய முறையில் தொகுத்து வெளியிடும் பணியில் எனக்கு உறுதுணை யாக மூத்த பத்திரிகையாளரும் இலண்டன் சுடரொளிச் சஞ்சிகையின் இணை ஆசிரியரு மான அன்பர் பொன் பாலசுந்தரம் அவர்கள் மிக்க ஈடுபாட்டுடன் செயற்பட்டார். அவருக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முருக பக்தர்களும் சங்கீதப் பிரியர்களும் இந்நூலினால் பயன்பெற வேண்டுமென்ற ஆவலுடன் இப் பாமாலை பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# திக்கரை முருகனின் திருவருள்

காரைநகர் களபூமி திக்கரைத் தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்த இவ்வந்தாதிக் கீர்த்தனைகளை ஆக்கியவர் யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்களாவர். இக்கீர்த்தனைகளின் கையெழுத்துப் பிரதி எமது கரங்களுக்கு எட்டியதே திக்கரை முருகனின் திருவருளேயன்றி வேறில்லை.

அண்மையில் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களை முக்கிய அலுவல் காரணமாகக் காண இணுவிலில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்றிருந்தோம். மாலை நேரம். வீரமணி ஐயர் அவர்கள் அமைதியாக இருந்தார். முகமன் கூறி வரவேற்றுத் தமது ஆக்கங்கள் பற்றியும் இசைத் துறைச் சாதனைகள் பற்றியும் அளவளாவிக்கொண்ருந்த சமயம் திக்கரை முருகனின் திருவருளினால் ஓர் அற்புதம் நிகழ்ந்தது என்றே கூறுதல் வேண்டும். தமது அலுமாரியில் வைத்திருந்த ஆக்கங்களிற் சில எப்போதோ உருவானவை என்றும் இன்னும் பதிப்பிக்கப்பட வில்லை என்றும் கூறி, அடியிற் கிடந்த கையெழுத்துப் பிரதியொன்றினைத் தற்செயலாக எடுத்துக் காட்டினார். 1953இல் அவராக்கிய திக்கரை முருகனின் அந்தாதிக் கீர்த்தனைகள் அடங்கிய கையெழுத்துப் பிரதியே அது. வீரமணி ஐயர் அவர்களிடம் செல்வதற்கு ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு முன்புதான் திக்கரை ஆலயத் திருப்பணிச் சபையினர் மகாகும்பாபிஷேகத்தின் சிறப்பு மலர் ஆக்கத்தின் பொறுப்பை எம்மிடம் ஒப்படைத்திருந்தனர். வீரமணி ஐயர் அவர்களது கையெழுத்துப் பிரதியைக் கண்டதும் திக்கரை முருகனின் கும்பாபிஷேக மலரில் இடம்பெறச் செய்யவே முருகன் இந்த அற்புதத்தைச் செய்தருளியுள்ளான் என அவரிடம் கூறி, மலர் வெளியீட்டுக்குப் பொறுப்பான ஆலயத் திருப்பணிச்

சபையினரிடம் இசைவு பெற்று அச்சில் பதிக்க ஆவன செய்வதாகக் கூறினோம்.

உண்மையில் முருகனின் திருவருளே இக் காரியத்தை ஊக்குவித்தது. வீரமணி ஐயர் அவர்களும் மனம் பூரித்துப் பக்தியுடன் முருகனை நினைந்து பூசையறையில் இவ்வந்தாதிக் கையெழுத்துப் பிரதியினை வைத்துப் பூசித்த பின்னர் எமக்கு விபூதிப் பிரசாதம் தந்து இப்பிரதியை எமது கரங்களில் தந்தபொழுது இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயக் காண்டாமணி இம்முயற்சிக்கு ஆசி கூறுவது போல் நாதமெழுப் பியது மற்றோர் அற்புதமாக அமைந்தது. தாம் எவருக்குமே தமது ஆக்கத்தின் கையெழுத்துப் பிரதியினைத் தருவதில்லை என்றும் எமது விடயத்தில் முருகன் திருவருளே முன்னிற்பதால் அதனைத் தருவதாக மிகவும் விநயத்துடன் கூறினார் வீரமணி ஐயர்.

நாம் அவரிடம் கூறியபடி காரியம் ஆற்றுவதற்கு முடியாத வகையில் மலர் பிரசுரிக்கும் விடயம் பல்வேறு சிரமங்களினால் தாமதமாகிக் கொண்டிருந்தது. மலரில் அந்தாதியை இடம்பெறச் செய்ய வாய்ப்பிருக்குமோ என ஏங்கிக்கொண்டிருந்தபோது 'யாமிருக்கப் பயமேன்' என அருள் பாலித்தான் முருகன். இம்மலரின் ஆக்கத்திற்கு உறுதுணையாக விளங்கிய ஆசிரியர் திரு. அம்பிகைபாகன் 24.02.1990 அன்று ஆலயத் திருப்பணிச் சபை அன்பர்கள் இருவருடன் மலர் வெளியீடு பற்றிப் பேச எமதில்லம் வந்திருந்தார். அவர்களிடம் வீரமணி ஐயர் அவர்களது அந்தாதியைக் காட்டி அதுபற்றிக் கூறினோம். அவர்களும் மிகவும் மன மகிழ்ச்சியுற்று எச் செலவு ஆனாலும் பரவாயில்லை, முருகன்புகழ்பாடும் கீர்த்தனைகளை மலரில் இடம்பெறச் செய்யும்படி அன்புடன் வேண்டிக் கொண்டமையும் முருகனின் திருவருளே.

முருகன் புகழ் பரப்பும் இவ்வந்தாதிக் கீர்த்தனைகளை மலரில் பதிப்பிக்க இசைந்தமைக்கு பிரம்மஸ்ரீ வீரமணி அய்யர் அவர்களுக்கும் ஆதரவு நல்கிய திருப்பணிச் சபையினருக்கும் மலராசிரியர் என்ற நிலையிலும் மலர்க்குழு சார்பிலும் உளமார்ந்த

நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அனைவருக்கும் முருகனின் திருவருள் கிட்டுவதாக.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் ஈழத்துச் சாகித்ய கர்த்தாக்கள் வரிசையில் முதன்மை பெறுபவர் எனக் கூறின் மிகையில்லை. பல்துறைக் கலைஞர். இவர் ஆலயங்கள் பலவற்றிற்குத் திருவூஞ்சல் பாடிப் பரவியுள்ளார். இவரது திறமைக்கு அவ்வப்போது கிடைத்த பட்டங்கள் குறிப்பிடற் பாலன, இயலிசை வாரிதி, கவிமாமணி, சாகித்ய சிரோமணி, சாகித்ய மாமணி, சாகித்திய சாகரம், சிருஷ்டி கலாபானு, முத்தமிழ் வாரிதி, சாகித்தியலஹரி போன்ற பட்டங்கள் அவரது ஆக்கத்திறனுக்கும், பெருமைக்கும் தக்க சான்றுகள். ஈழத்திலும், தமிழகத்திலும் நன்கு அறிமுகமான சிறந்த கவிஞருமாவார். இசை நுட்பங்களை வெளிப்படுத்தும் ஆக்கங்களையும் உருவாக்கிய பெருமை இவருக்குண்டு.

திக்கரை முருகன் மீது இவர் பாடியுள்ள இவ்வந்தாதிக் கீர்த்தனைகளில் இசையும் பக்தியும் முருகனது தலப் பெருமைகளும் இணைந்துள்ளன. இசையொடு பாடுவதற்கேற்ற ராகம் தாளம் ஆகியவற்றுடன் இயற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. பக்தர்களுக்குச் சிறந்த தோத்திரத் தொகுதி. இசைத் துறையில் வல்லவர்களுக்கு ஏற்றறொரு கீர்த்தனைத் தொகுதி. இதனைப் படிக்குந்தோறும் அடியவர்கள் உள்ளத்தில் முருகன் மீதுள்ள பக்தி பெருகும். அடியவர்கள் சென்று பக்தியுடன் வழிபடுவதற்கேற்ற தெய்வமாக முருகனைப் போற்றிக் கூறும் இக்கீர்த்தனைகள் திக்கரைத் தலப்பெருமைகளைச் சிறப்பாகக் கூறுகின்றன. இவையே இப்பாடல்களின் கருப்பொருள்.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களது இத்தகைய சிறப்புப் பொருந்திய அந்தாதிக் கீர்த்தனைகளைத் திக்கரை முருகனின் திருவடித் தாமரைகளில் சமர்ப்பித்து வழிபடுவோமாக.

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**
01.03.1990
கும்பாபிஷேக மலராசிரியர்

“இயல் இசை வாரிதி”

# பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்

இயல் இசையில் ஈழ மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர் யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள்.

இசையோடு இணைந்து எல்லோரும் இன்புற்று வாழவேண்டு மென்ற ஆசை உடையவர். இவரது தெய்விகப் பற்றை உலகறியும். ஆலயங்கள்தோறும் இவருடைய கீர்த்தனைகள், அந்தாதிகள், ஊஞ்சல் பாடல்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. நடன அரங்குகளில் ஐயர் அவர்களின் பாடல்கள் மனங்களைப் பரவசப்படுத்துகின்றன. நமது இறை பத்தி மார்க்கத்தையும் இசை, நடனக் கலைகளின் மேம்பாட்டையும், தமிழர் பாரம்பரியங்களையும், எமது பரம்பரையினர் எமது திருத்தலங்களின் பெருமைபற்றி அறியவும், எமது வாழ்க்கைமுறை பற்றி அறியவும் ஐயர் அவர்களின் இப்பாமாலைகள் உதவுகின்றன.

வீரமணி ஐயர் அவர்களின் சமய, சமூக சிந்தனைக்கு ஓர் உதாரணமாக அன்னார் திக்கரை முருகன் திருத்தலத்திற்குப் பாடித் தந்த 100 கீர்த்தனைகளும் விளங்குகின்றன. ஆலயங்களின்மேல் ஐயர் அவர்கள் வைத்திருந்த ஆர்வத்தின் பிரதிபலிப்பாகும் இவை.

இப் பாடல்களை இன்று ஆவணப்படுத்தி நூல் வடிவில் வெளியிடுவதில் நாம் பெருமை அடைகிறோம். ஐயர் அவர்களின்

பணி நிரந்தரமான ஒன்று. அவர் மறைவால் சமய, கலை, நாட்டிய உலகிற்குப் பேரிழப்பேற்பட்டுள்ளது.

ஐயர் அவர்கள் எளிய வாழ்க்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். தாம் கல்வி பயின்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி யிலேயே ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்தவர். சங்கீதம், நாட்டியம், நாட்டிய நாடகம், ஆலய வரலாறுகளில் இவருக்கிருந்த அக்கறை, ஆற்றல், ஞானம் இவருடைய முன்னேற்றத்துக்கு வழியாக அமைந்தன.

மானிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு மாற்றலாகிச் சென்ற ஐயர் அவர்கள் இசைத்துறையில் பல சாதனைகளைச் சாதித்த பெருமை பெற்றார். கல்வி, இசை, சமய, கலாச்சார வளர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கிய மகா மேதை இவரெனலாம்.

ஈழத்தில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும், பல உலக நாடுகளிலும் ஐயர் அவர்களின் பாடல்களுக்கு மதிப்பிருக் கின்றன. பாடல்களுக்கு இவர் கையாண்ட இனிமையான, கனிவான பதப் பிரயோகம், தாள வரையறைகள், பாடலமைப்பு நடன ஆசிரியர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றன. நட்டுவாங்கம் செய்பவர்களுக்கு உணர்ச்சியும், உற்சாகமும் அளித்த இவரது பாடல்கள் நடன அரங்கேற்றங்களில் முதன்மை பெற்றன. பாராட்டப்பட்டன. "கற்பகவல்லியின் பொற்பதங்கள்" என்ற பாடல் ஒலிக்காத மேடைகள் இலங்கையிலாவது தமிழ் நாட்டிலாவது இல்லை எனவே கூறலாம். நர்த்தகிகளுக்கு நடன உத்திகளைக் காண்பிக்க இவரது பாடல்கள் உதவுகின்றன.

நடன, இசைப் பயிற்சிக்காக இவர் இந்தியா சென்றிருந்த போது இக்கலைகளில் பிரசித்தி பெற்றிருந்தவர்களிடம் முறையான சிட்சை பெற்றுத் தேறிய பாண்டித்தியமும் இவருக்குண்டு. நடன மேதை ருக்மணி அருண்டேலிடம் நடனத்தையும், எம். டி. இராமநாதனிடம் சங்கீதத்தையும், பாபநாசம் சிவனிடம் சங்கீத சாகித்ய நுணுக்கங்களையும் கற்று இக்கலைகளில் முதிர்ச்சி கண்டவர்.

எழுபத்து இரண்டு மேள கர்த்தாக்களையும் நன்கறிந்த சிறந்த கலைஞராக மதிக்கப்பட்டவர் என்றால் மிகையாகாது. அறிவாற்றல் மிக்க வீரமணி ஐயர் அவர்கள் இராமநாதன் இசைக் கல்லூரியில் 1984ஆம் ஆண்டிலிருந்து இசைப் பயிற்சி ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

இப்படிப் பெருமைக்குரிய ஐயர் அவர்களின் கீர்த்தனை களை மக்கள் படித்தும் பாடியும் மகிழ்ச்சியடைய இப்பாமாலை உதவும்.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் வைதிகப் பரம்பரை யினரான இணுவில் நடராஜ ஐயர் தம்பதியினரின் புதல்வராவார். 1931ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் திகதி பிறந்த ஐயர் அவர்கள் தமது வாழ்க்கையைச் சமய, இசை உட்பட்ட கலைகளின் வளர்ச்சிக்கே அர்ப்பணித்த பெருமைக்குரியவர். இவர் 2003ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் திகதி அமரரானார்.

ஐயர் அவர்களின் ஆற்றல்மிக்க சேவையை ஆவணப் படுத்தி இசை உலகினர் எதிர்காலத்தில் பெரும் கீர்த்தி பெறவேண்டுமென்னும் நோக்குடன் திக்கரை முருகன் திருத்தலப் பாமாலையை வெளியிட்டுள்ளோம். அன்னாரது குடும்பத்தினருக்கு இதன் பெருமை உரித்தாகட்டும்.



உ

ஈழத்துக் காரைநகர்

# திக்கரை முருகன் திருத்தலப் பாமாலை

விநாயகர் ஸ்துதி

## இக்கணம் அருள்வாய் இன்ப விநாயகா

ராகம் : நாட்டை தாளம் : ஆதி

பல்லவி

இக்கணம் அருள்வாய் இன்ப விநாயகா
திக்கரை முருகனைத் தீந்தமிழிற் பாட

அனுபல்லவி

மிக்கபுகழ்காரை மிளிர்கள பூமியதில்
தக்கவோர் துணையாகத் தானெழுந்த சுடரே

சரணம்

ஆறுமுகன் பதத்தை அழகுதமிழில் போற்றிக்
கூறுபுகழ் பாடக் குஞ்சரனே அருள்வாய்
வேறு துணையில்லை வேழமுகத்தவனே
ஏறுமயில் ஏறும் எம்பிரான் கழல்பாட 1

# பாடிட வருவான் பாலசுப்பிரமணியன்

ராகம் : ஷண்முகப்பிரியா தாளம் : ஆதி

பல்லவி

பாடிட வருவான் பாலசுப்பிரமணியன்
ஆடுமாமயில் அணங்கார் புடைசூழ

அனுபல்லவி

ஓடிடும் தீவினைகள் ஒளிரருட்சுடர்வேலன்
நாடியே வந்திடுவான் நல்லவை தந்திடுவான்

சரணம்

வள்ளிகுஞ்சரி காந்தன் வடிவேல் முருகேசன்
தெள்ளு தமிழ்ப்பாடல் தேனமுதுண்டவன்
துள்ளும் அலைபுரளும் தூயதிக்கரை வாசன்
அள்ளி அருளைநல்கும் ஆனந்தத் தமிழ்க் கானம் 2

# மோனக் களபூமி ஞானத் திக்கரைவாசன்

ராகம் : பூபாளம் தாளம் : ஆதி

பல்லவி

கானக் குறத்திவள்ளி தேவகுஞ்சரி நாதன்

மோனக் களபூமி ஞானத்திக்கரை வாசன்

அனுபல்லவி

தீனதயாபரன் திருமுருகன் குமரன்

ஞானவேல் ஏந்திடும் நாயகன் வேலன்

சரணம்

பாதாரவிந்தமே பக்திசெய்து துதிப்பாய்

ஆதாரமாகி அருள் ஆறுமுகன் தருவான்

நாதா எனப் போற்றி நற்றமிழ்ப் பண்படிப்பாய்

காதாரக் கேட்டு அருள் கந்தன் தருவன் என்றும் 3

# குன்றுதோறும் எழில் நின்று ஆடும் பாதன்

ராகம் : பௌலஹரி　　　　தாளம் : ஆதி

பல்லவி

என்றும் கந்தன் பதம்பாடு எல்லாம்
வென்று வாழும் வழி வேல்தரும் கண்கூடு

அனுபல்லவி

குன்றுதோறும் எழில் நின்று ஆடும் பாதன்
அன்று அரக்கர்குல அகந்தை தொலைத்த நாதன்

சரணம்

நெக்கு நெக்குருகியே நிமலன் பதத்தை நாடு
இக்குவலயத்தினில் இன்பமாய்ப் போற்றிப் பாடு
திக்குவேறில் லையெனத் திருமுருகனைத் தேடு
திக்கரை முருகனின் பக்குவ அருளைக் கூடு　　4

# கூடிருக்கையில் கூடுவாய்

ராகம் : மோகனம் தாளம் : ஆதி

பல்லவி

கூடிருக்கையில் கூடுவாய் – திக்கரை
நாடிருக்கும் ஷண்முக நாதன் திருப்பதத்தை

அனுபல்லவி

மாடி மனைவி மக்கள் மன்னிடும் சொந்தமுமல்ல
தேடிப்புதைத்த செல்வம் தேகமும் நிதமல்ல

சரணம்

பக்குவ மார்க்கம் காட்டிப் பரிசுத்த நிலைதந்து
மிக்கிடு பேரின்பம் மிளிரத் தருவான் குஹன்
திக்கரை முருகனின் திருப்பாதத்தை நினைத்து
எக்கணமும் தொழுது ஏற்றுவாய் நின்வினைகள் 5

# வினை தீர்க்கும் வேலவன்

ராகம் : கமாஸ் தாளம் : ஆதி

பல்லவி

வினைதீர்க்கும் வேலவன் விரிமயில் வாகனன்
எனை ஆளும் திக்கரை எழில் குஹன் மோகனன்

அனுபல்லவி

தினைமாவும் தேனமுதும் தெவிட்டாமல் உண்டவன்
கனைமா கடல் சூழ் அலைக் களபூமி கொண்டவன்

சரணம்

மன்னும் அவன் அருளை மாநிலத்தில் நாடு
கன்னல் தமிழில் அவன் கழல் திருப்புகழ் பாடு
வண்ணமயில் அழகன் வடிவேலன் பதம் கூடு
இன்னமுதான அருள் இனிது பருகி ஆடு 6

# ஆடும் மாமயில் அமரும் அழகன்

ராகம் : ஸிந்துபைரவி தாளம் : ஆதி

பல்லவி

ஆடும் மாமயில் அமரும் அழகன்
நாடும் மிளிர் திக்கரை வாழும் மால்மருகன்

அனுபல்லவி

ஏடும் புகழ் எழிலின் ஏந்தலாம் ஷண்முகன்
ஈடும் இணையிலாத இன்ப அருள் தருவன்

சரணம்

கடல லைகள் பாடிக் கந்தன் பதம் நாடும்
நடனமிடும் வயல் நெல் நாடிக்குகனைப் பாடும்
மடமயிலும் ஆடும் மாங்குயில்கள் கூவும்
இடமதுவாம் காரை இன்பக் களபூமியதில் 7

# அதிமதுரத் தமிழ் அமுதம் உண்டவன்

ராகம் : தோடி தாளம் : ஆதி

பல்லவி

அதிமதுரத் தமிழ் அமுதம் உண்டவன்
பதிக்களபூமித் திக்கரைத்தலம் கொண்டவன்

அனுபல்லவி

நதிமதியணியான் நற்குரு வானவன்
கதியென வந்தவர் கடிவினை வென்றவன்

சரணம்

அருளமுதம் அள்ளி ஆனந்தமாய்த் தருபவன்
திருவடி தந்துனைத் திகழ்ந்திடச் செய்பவன்
குருவடிவானவன் குஞ்சரன் சோதரன்
பெருவருள் பேரின்பம் பேணி யருள்பவன் 8

# பவவினை நீக்கிடும் சரவணபவன்

ராகம் : வலஜி தாளம் : ஆதி

பல்லவி

பவவினை நீக்கிடும் சரவணபவன் குஹன்
தவநிறை யருள்தனைத் தந்திடும் குருபரன்

அனுபல்லவி

புவனியில் திக்கரைப் புனிதன் திருமுருகன்
அவனியின் அடியவர்க் கருள்தனைத் தருபவன்

சரணம்

முன்னம் மாங்கனி வேண்டி வண்ண மயிலின்மீது
இன்னமுதாய் உலகை இவர்ந்தவன் கவர்ந்தவன்
கன்னல் தமிழ் அவ்வை கனித்தமிழ் உண்டவன்
நன்னல் வரமதை நாளும் தருபவன் 9

# களபூமித்
# திக்கரைக் கந்தனே

ராகம் : ஹம்ஸத்வனி தாளம் : ஆதி

### பல்லவி

தருவேங்கை மரமாகித் தள்ளாடும் கிழமாகிப்
பெருவேடனாக வந்த பெருமானே நீ அருள்வாய்

### அனுபல்லவி

அருமறைகள் போற்றும் அறுமுகனே முன்னர்க்
குறமாமகளை வேண்டிக் குறும்புகள் செய்ய அன்று

### சரணம்

அழகான மயில்மீது எழில்மாதர் புடைசூழக்
களபூமித் திக்கரைக் கந்தனே நீ அருள்வாய்
விழிநீரும் சொரிபாய வேலவனே உன்னைத்
தமிழ்பாடிப் போற்றிடத் தண்ணருள் நல்கிடுவாய் 10

# நல்கிடுவாய் அருள் நாயகனே

ராகம் : கல்யாணி　　　　தாளம் : ஆதி

பல்லவி

நல்கிடுவாய் அருள் நாயகனே – திக்கரை
மல்கும் மால் மருகனே மாமயில் வேலவனே

அனுபல்லவி

வெல்கவுன் விறல்வேலும் வீரச்சேவற் கொடியும்
பல்கலை போற்றிடும் பாலசுப்பிரமண்யனே

சரணம்

கல்யாணி அபிராமி கட்டியணைத்த செல்வா
நல்யா னைமுகத்தவன் நாளும் போற்றும் முதல்வா
தொல்லாணை யுரித்தவன் நுதல்விழி யுதித்தவா
கல்லாரும் கற்றவரும் கனிந்தருள் புரிந்தவா　　11

# வா வடிவேலவா சேவடி தா

ராகம் : காபி தாளம் : ஆதி

பல்லவி

வா வடிவேலவா சேவடி தா – புனிதா
காவடி ஆடியே கழல்பணிந்தேன் முருகா

அனுபல்லவி

பூவடிப் பாதந்தா புண்ணியனே கந்தா
கோமகளின் மைந்தா கோமள அரவிந்தா

சரணம்

தாமரைப் பாதமே தந்தருள நீவா
சோமசுந்தரன் மைந்தா சுந்தரனே தேவா
தேமலர்ப் பொழில் சூழும் திக்கரைத்தல வாசா
நாமமகிமை பாட நாளும் வரமே நீதா 12

# நீதானல்லால் வேறு துணை யார்

ராகம் : கரகரப்பிரியா தாளம் : ஆதி

பல்லவி

நீதானல்லால் வேறுதுணையார் – ஷண்முகா
நாதா திக்கரைவாழும் நாயகனே முருகா

அனுபல்லவி

பாதார விந்தமே பாரில் துணையெனவே
ஆதாரமென்றடைந்தேன் ஆறுமுகனே அருள்

சரணம்

சந்ததம் நின்கழல் சரணடைந்தேன் முருகா
வந்தெனக்கருள் நீயும் வரந்தா குமரா
செந்தமிழில் உன்னைச் சேவிக்க வரந்தா
கந்தனே கார்த்திகேயனே சேந்தா 13

# சேந்தனே வள்ளி காந்தனே வருவாய்

ராகம் : கல்யாணவசந்தம் தாளம் : ஆதி

பல்லவி

சேந்தனே வள்ளி காந்தனே வருவாய்
பூந்தளிர்ப் பாதமே புகலிடமா யடைந்தேன்

அனுபல்லவி

மாந்தளிர் மேனி மங்கை மருவு குஞ்சரி வள்ளி
மாந்திடும் அழகனே மாதிக்கரைக் குகனே

சரணம்

நின்னிரு தாளினை நிதம்பாட நீயருள்
பன்னிரு கையனே பரிந்தருள்வாய் பொருள்
முன்வினையாம் இருள்போக்கிடும் வேல் அருள்
கன்னல் கழனி சூழும் களப்பூமி வாசனே 14

# வாசமலர் பொழில்வள நிறை திக்கரை

ராகம் : பெலஹரி தாளம் : ஆதி

## பல்லவி

வாசமலர்பொழில் வளநிறை திக்கரை
நேசனே வேலனே நினதடியே கதி

## அனுபல்லவி

வீசுமணம் கமழ் வியன் கடம்பணி மார்பா
பூசுரர் தொழும் ஞானப்புனித குணசீலா

## சரணம்

பதமலர்தனை நாடும் பாரில் துணையெனவே
நிதமுருகித் துதித்தேன் நீயருளாயோ கந்தா
சதமென நம்பினேன் ஷண்முக வடிவேலா
மதகரி மாமுகன் மருவிடும் இளையோனே

# மருவிடும் திக்கரை மயிலோனே

ராகம் : பெஹாக் தாளம் : ஆதி

பல்லவி

மருவிடும் திக்கரை மயிலோனே – அபயம்
திருவிளங்கும் காரைக் களபூமியாம் தலம்

அனுபல்லவி

பெருகிக்கண்ணீர் சொரியப் பேரானந்தப் பதத்தை
உருகி உருகிப் பாடி உவந்துனைப் போற்ற அருள்.

சரணம்

சந்தத்தமிழில் உன்னை வந்தனை செய்து தமிழ்
சிந்தும் அருணகிரி சிறக்க அருள் செய்தாய்
செந்தமிழ்த் தேனருந்தும் சேந்தனே ஷண்முகனே
வந்தெனைப் பாராயோ வரங்களும் தாராயோ 16

# தாராய் நின்னருள் வடிவேலா

ராகம் : கரகரப்பிரியா தாளம் : ஆதி

பல்லவி

தாராய் நின்னருள் வடிவேலா நிதம்
சீராய் விளங்கும்காரைத் திக்கரை வேல்முருகா

அனுபல்லவி

காரானைக் கிளையோனே கந்தனே கடம்பனே
பேரானந்தம் அருளும் பெருமாளே குருநாதா

சரணம்

அரன்மகிழும் குரு அழகனே குழகனே
வரம் அருளி நல்ல வாழ்வும் தருவாயோ
சிரமணி ஆடிடச் சேவற்கொடி ஆட
கரமலர் வேலாடக் கந்தனே நீ விரைந்து 17

# விரைந்து வந்தாளுவாய் வேலவனே

ராகம் : கானடா தாளம் : ஆதி

## பல்லவி

விரைந்து வந்தாளுவாய் வேலவனே – நினைக்
கரைந்து கரைந்து நாளும் கசிந்துருகும் என்னை

## அனுபல்லவி

நிறைந்து பொலியும்பதி நீடுபுகழ்காரை
உறைந்து மலியும் களபூமித் திக்கரை வாசா

## சரணம்

அவ்வை அகவல் கேட்டு அகமும் குளிர்ந்தனை
செவ்வடி வேலேந்திச் செய்தனை நல்லருள்
திவ்விய குணாளனே திக்கரை வேலவா
கொவ்வை யிதழ் முறுவலைக் குழிய மயிலேறி 18

# மயிலேறி விளையாடும் வேலவனே

ராகம் : சாமா தாளம் : ஆதி

பல்லவி

மயிலேறி விளையாடும் வேலவனே ஞான
அயிலேந்தி எனையாளும் ஆறுமுகனே அபயம்

அனுபல்லவி

வயலேறும் திக்கரை வளநாடு வாழ்பவனே
மயலாடும் குறவள்ளி குஞ்சரி நாயகனே

சரணம்

அனுதினமும் உன்றன் அம்புஜப் பாதமலர்
பனுவலும் பண்ணும்பாடிப் பக்திசெய்து துதித்தேன்
புனுகும் ஜவ்வாதுமிட்டுப் பூமாலை சூட்டிப்பாடி
உனையலங்கரித்தேன் உவந்தருள் செய்தருள் 19

# அருள்பொலி ஆறுமுகம்

ராகம் : காமாஸ் தாளம் : ஆதி

பல்லவி

அருள்பொலி ஆறுமுகம் தரும் எழில் தேறுமுகம்
திருவளர்கள பூமித் திக்கரை வாழுமுகம்

அனுபல்லவி

மருவும் அடியவரின் மனக்குறை தீர்க்கும் முகம்
உருவின் அழகுமலி உயர்அருள் நல்குமுகம்

சரணம்

மயிலேறி விளையாடும் மாமுகமும் ஒன்று
மயல்தீர ஓங்காரம் மண்ணிடை ஓதுமுகம்
கயல்விழி மாதரைக் கட்டிய ணைக்கும்முகம்
அயில் ஏறுமுகம் அடியார்க் கருளும் முகம்

# அமுதமூறும் தமிழின் அழகன்

ராகம் : தேஷ் தாளம் : ரூபகம்

பல்லவி

அமுதமூறும் தமிழின் அழகன்
அவனே திக்கரைப் பதியின் முருகன்

அனுபல்லவி

குமுதச் செவ்வாய் குஞ்சரி நாதன்
கமழும் பொழில் சூழ் களபூமிவாசன்

சரணம்

இனிக்கும் தமிழில் இனியன் பதத்தைப்
பனிக்கப் பாடிப் பக்திசெய் இகத்தில்
குனித்த புருவம் குமிழ் சிரிப்புடன்
நனித்தவழ் அருள் நல்கும் வேலன் 21

# வேலன் பதத்தின் நிழல் நாடு

ராகம் : காம்போதி தாளம் : ஆதி

பல்லவி

வேலன் பதத்தின் நிழல் நாடு – மனமே
சீலம் மிகு திக்கரைச் சேந்தனை நீபாடு

அனுபல்லவி

நீலகண்டன் குமரன் நீலாயதா க்ஷீபாலன்
பாலசுப்பிரமண்யன் பரிந்தருள்வான் பூபாலன்

சரணம்

வாலைக்குமரி வள்ளி தேவகுஞ்சரி காந்தன்
வேலைஏந்தும் பெருமான் விரிமாமயில் வேந்தன்
நாலுவேதம் புகழும் தேவன் ஷண்முகநாதன்
காலைப்பிடித்தால் கதி கனிந்து தரும் பொற்பாதன் 22

# பொற்பதம் அருளும் பூபாலன்

ராகம் : பூபாளம் தாளம் : ஆதி

பல்லவி

பொற்பதம் அருளும் பூபாலன் – வேலன்
நற்பதம் நாடுவாய் நல்லருள் தரும் சீலன்

அனுபல்லவி

கற்பனை கடந்திடும் கட்டழகன் முருகன்
தற்பரனின் புதல்வன் தாக்ஷாயணி குமரன்

சரணம்

ஆனந்த ரூபனாம் அழகு திக்கரை வாசன்
கானந்தனைப் பாடக் கனிந்தருள் தரும்நேசன்
மோனந்தவழும் காரை ஞானக் களபூமித்தேசன்
ஞானந்தனைத் தருவான் ஞாலமதில் என்றும் 23

# ஞாலம் வலம் வந்த நாயகனே

ராகம் : அடானா தாளம் : ஆதி

பல்லவி

ஞாலம் வலம் வந்த நாயகனே முருகா
கோலமயில் மீதில் கோலப்பழம் வேண்டி

அனுபல்லவி

பாலசுப்ரம்மண்யா பரிந்தருள் நீ தருவாய்
காலபயம் வெல்லக் கந்தனே வந்தருள்வாய்

சரணம்

காரைக் களபூமிக் கவின்பதி திக்கரை
ஊரைச் சிறக்கவருள் உன்னதக் கோயில் கொண்டாய்
சீரைச் சிறப்பை நல்கிச் சேவடி நீ தருவாய்
நாரைமலி வயல்சூழ் நல்திக்கரை நாதா 24

# திக்கரை நாதனே தீனதயாபரா

ராகம் : பந்துவராளி தாளம் : ஆதி

பல்லவி

திக்கரை நாதனே தீனதயாபரா
முக்கண்ணன் புதல்வனே முத்தியின் தத்துவனே

அனுபல்லவி

தக்கதுணை நீயே தண்ணருள் நீ தருவாய்
மிக்க புகழ் காரை மிளிர் களபூமிப் பதி

சரணம்

நாதவேத தத்துவ நாயகனே குமரா
பாதமலர் தாராய் பத்மநாபன் மருகா
கீதம் பாடி உன்னை நாதனே போற்ற அருள்
வேதம் புகழும் வடிவேலனே ஷண்முகனே 25

# ஷண்முகா நின்பதம் சரணம்

ராகம் : பாகேஶ்ரீ　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

ஷண்முகா நின்பதம் சரணமையா – உன்னைப்
பண்முறையால் பாடப் பரிந்தருள் செய்வேலையா

அனுபல்லவி

கண்மணியே முருகா கார்த்திகேயா கடம்பா
வண்ண மயிலழகா வாயாரப் பாட அருள்

சரணம்

அருணகிரி நினது அடிமலர்ப் புகழ்பாட
அருளை அள்ளிஅள்ளி ஆறுமுகா சொரிந்தாயே
திருவளர் களபூமித் திக்கரை முருகையா
வருவாயோ தமிழ்த் திருவடி பாடினேன் 26

# பாடிடப் பாடிடப் பாட்டினிக்கும்

ராகம் : பீம்பிளாஸ் தாளம் : ஆதி

பல்லவி

பாடிடப் பாடிடப் பாட்டினிக்கும் – மனம்
நாடியே முருகனின் நல்லருளைப் பருகும்

அனுபல்லவி

ஆடிடும் மயில்மீது அணங்கா ரிருவருடன்
நாடிலங்கும் திக்கரை நாயகனைத் தமிழில்

சரணம்

உள்ளமும் உருகும் உருகியருள் பருகும்
கள்ளமிலா மனமும் கசிந்து கண்ணீர் பெருகும்
வள்ளி மணவாளன் வடிவழகு திகழும்
புள்ளிமயில் வேலன் புகழ்தனைச் செந்தமிழில் 27

# கந்தனைப் பாடிடுவாய்

ராகம் : தன்யாசி தாளம் : ஆதி

பல்லவி

செந்தமிழ்க் களபூமி செழுநகர்த் திக்கரைக்
கந்தனைப் பாடிடுவாய் – மனமே

அனுபல்லவி

சுந்தர ரூபனை சுகுண சல்லாபனை
விந்தை மயிலேறும் வேலவனைக் குகனை

சரணம்

தமிழுக்கு உருகுவான் தாமோதரன் மருகன்
அமுதமாய் அருள்தனை அள்ளி அள்ளித் தருவன்
நமதிடர் தீர்த்திடுவன் நாயகி வள்ளி காந்தன்
கமழும் வயல்மலியும் களபூமி வாழ்பவன் 28

# களபூமித் தெய்வமே கந்தா

ராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி

களபூமித் தெய்வமே கந்தா – உன்னை
உளமார வேதுதித்தேன் உவந்தருள் செய்குமரா

அனுபல்லவி

வளமேவும் திக்கரை வயல்சூழ வாழ்பவனே
அழகான மயில்மீது அமர்பவனே குகனே

சரணம்

சரணம் சரணமென்று சந்ததம் உனைத்தொழுதேன்
வரமருளி நீயும் வந்தருள் தாராயோ
கரமிளிர் வேலேந்திக் கலாப மிவர்பவனே
தரணியில் உனதிரு தாளைச் சரணடைந்தேன் 29

# சரணமலரருள் ஷண்முகனே

ராகம் : வசந்த தாளம் : ஆதி

பல்லவி

சரணமலரருள் ஷண்முகனே – குஹனே
பரமனின் புதல்வனே பாலசுப்பிரமணியனே

அனுபல்லவி

புரமெனும் திக்கரை அப்புனிதனே வேலவனே
மரணபயம் தீர்க்கும் மரகத மயிலவனே

சரணம்

அருளை நினைந்துருகி அல்லும் பகலுமுன்றன்
திருவடி தொழுமெனக்குத் துணை செய்ய வாராயோ
முருகனே முகுந்தனின் மருகனே மாமணியே
பெருவரம் நல்கிடும் பேரானந்தப் பொருளே 30

# பொருளறியாப் பிரமன் பெருமகந்தையை வென்றாய்

ராகம் : ஹம்ஸத்வனி தாளம் : ஆதி

பல்லவி

பொருளறியாப் பிரமன் பெருமகந்தையை வென்றாய்
கருவானாய் ஓங்காரக் கந்தனே நீ அருள்வாய்

அனுபல்லவி

திருவளர்த் திக்கரை திகழும் சுப்பிரமணியா
திருவடி நம்பினேன் ஒருவரும் இல்லை ஐயா

சரணம்

அருவியெனத் தமிழ் அழகு பாடல்தனைச்
சொரிய வைத்தாய் ஐயா சொக்கநாதன் மகனே
பெருவடி வேலேந்திக் குறமகள் குஞ்சரியும்
மருவிட வருவாயோ மயிலேறும் குருபரனே 31

# குருபரனின் திருவடிகள் சரணம்

ராகம் : நாதநாமக்ரியை தாளம் : ஆதி

பல்லவி

குருபரனின் திருவடிகள் புவனியிலே சரணடைவாய்
பெருவரங்கள் தந்து குஹன் பேரின்பநிலை தருவன்

அனுபல்லவி

மருவுவயல் அழகுமலி மாபதியாம் திக்கரையில்
உருவினெழில் திகழுமிறை உத்தமனாம் தத்துவஞ்சேர்

சரணம்

அலைகள் அவன் புகழதனை
அசைந்துருண்டு ஆடிப் பாடும்
தலையசைந்து நெற்கதிர்கள் தாளிணைகள் நாடி யாடும்
குலைமலி பூக்குலுங்கிடுமே குமரன் இசைகுயில் பாடும்
நிலைதரும்வேல் நிமிர்ந்து அருள்
நீணிலத்தில் நல்கி ஆடும் 32

# ஆடும் பரிவேல் ஆறுமுகன்

ராகம் : சுபபந்துவராளி தாளம் : ஆதி

பல்லவி

ஆடும் பரிவேல் ஆறுமுகன் – பதம்
நாடியே துதிப்பாய் நரகதி வருமே

அனுபல்லவி

கூடிடும் வினையெலாம் குமரவேல் கொல்வான்
தேடிடும் அருளைத் தித்திக்கத் தருவான்

சரணம்

வாயார அவன் புகழ் வண்டமிழிற் பாடு
நேயா எனக்குகன் நீழலை நாடு
பாதார விந்தமே பரிந்தருள்வான் ஐயன்
தீதானவை தொலைப்பான் திக்கரை முருகன் 33

# திக்கரை முருகனின் திருவடிபோற்று

ராகம் : நாட்டைக்குறிஞ்சி தாளம் : ஆதி

பல்லவி

திக்கரை முருகனின் திருவடி போற்று
அக்குருபரன் அருள் அள்ளியே தருவான்

அனுபல்லவி

பக்குவ மார்க்கம் காட்டி பரமானந்தம் ஊட்டித்
தக்க பேரானந்தத் தண்ணருளும் தருவான்

சரணம்

சரவண பவ எனும் சடாட்சரத்தை ஓது
பரமலர் வேலேந்தும் கந்தன் உனை ஆள்வான்
மரகத மயிலேறி மகானுபாவன் வருவான்
புரநகர் திக்கரை புரக்கும் முருகேசன் 34

# முருகேசனை நினைந்து உருகு

ராகம் : பெஹாக் தாளம் : ஆதி

பல்லவி

முருகேசனை நினைந்து உருகு – மனமே
திருவாழும் காரைநகர் திக்கரை வளர்ந்திடும்

அனுபல்லவி

குருவாக ஈசனின் பெருமாதவ முருகன்
வருவான் உனை என்றும் வாழ்வினில் காத்திடுவான்

சரணம்

நீறிலங்கும் நெற்றி நெடுவேலேந்தும் கரம்
ஆறிரு நயனங்கள் அருளை அள்ளி நல்கும்
மாறிலா வள்ளியும் மருவுகுஞ்சரி மாதும்
ஏறிமா மயில்மீது எழில் பவனிவரும் 35

# பவனி வந்தான் புவனி தனிலே

ராகம் : சுருட்டி　　　　தாளம் : ரூபகம்

பல்லவி

பவனி வந்தான் புவனி தனிலே
பவங்கள் தீர்க்கும் சரவண பவன்

அனுபல்லவி

தவநிறை தலம் திருத் திக்கரையில்
அவனி போற்ற ஆறுமுகன் திருப்

சரணம்

வேத கோஷம் முழங்க சாம
கீதம் தேவர் கின்னரர் பொழிய
நாதன் ஷண்முகன் நல்லருள் கொடுக்கப்
பாதம் நல்கிப் பக்குவம் ஈய　36

# பக்குவநிலை தந்து பரிந்தருளும் தெய்வம்

ராகம் : கீரவாணி　　　　தாளம் : ஆதி

பல்லவி

பக்குவ நிலைதந்து பரிந்தருளும் தெய்வம்
திக்குபுகழும் காரை திக்கரையுறை செல்வன்

அனுபல்லவி

எக்கணமும் மறவா தெழில் வேலன் பதம்நினைந்து
நெக்குருகும் அன்பர் நெஞ்சமதிலே நின்று

சரணம்

அகமதில் ஆறுமுகன் அருளுருவம் தோன்றும்
இகமதில் நல்லருளை இனியவேல் நின்றூன்றும்
புகலரிய புகழும் புனிதத்தமிழ் மூன்றும்
குகனருள்வான் காரைக் களபூமியில் என்றும் 37

# என்றும் எழில்வேலன் துணையே

ராகம் : ஹம்ஸாநந்தி தாளம் : ஆதி

பல்லவி

என்றும் எழில் வேலன் துணையே – திக்கரை
நின்று அருளும் கந்தன் நிழலுக்கு ஏதிணையே

அனுபல்லவி

கன்றுகுரல் கேட்டுக் கனிந்து வரும் பசுபோல்
என்றும் அருள்சொரிந்து எம்மை இரட்சிப்பான் வாழ்வில்.

சரணம்

தாமரைப் பூம்பதம் தஞ்சமென அசைவாய்
சோமசுந்தரன் மகன் சொரிந்திடுவான் அருள்
பூமலர் சோலைமலி புனிதக் களபூமி
க்ஷேமமுற அமர்ந்து செய்தருளும் தெய்வம் 38

# அருளும் தெய்வம் ஆறுமுகம்

ராகம் : ரஞ்சனி தாளம் : ரூபகம்

பல்லவி

அருளும் தெய்வம் ஆறுமுகம் வேதப்
பொருளின் முதலும் முடிவு மானவன்

அனுபல்லவி

இருளும் அகற்றி இடர்கள் தீர்த்துப்
பெருவரம் நல்கிப் பேரின்பம் தந்து

சரணம்

நினைந்து உருகி நிழலைப் பெறுவாய்
கனிந்து தமிழிற் கந்தனைத் துதிப்பாய்
புனைந்து கடம்பும் அணியும் குமரன்
சிறந்து காரைத் திக்கரைத் தலத்தில் 39

# திக்கரைத் தலம் உறை திருமுருகன்

ராகம் : ஹமீர்கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

திக்கரைத் தலம் உறை திருமுருகன் – குகன்
தக்கவரம் நல்கும் தாமோதரன் மருகன்

அனுபல்லவி

எக்கணமும் அவன் எழில்நிறை பூம்பதம்
இக்களபூமியிலே எனறும் பூஜிப்பாய் நிதம்

சரணம்

கலியுக வரதனாம் கந்தன் அருள் செய்வான்
நலிவெலாம் நீக்கிடுவான் நல்லருளும் பெய்வான்
மலியும் வயல்கள் பொலி வளநகர் காரைதனில்
பொலிய அமர்ந்தருள் பேரின்ப வடிவாகி 40

# பேரின்ப வடிவேலன்

ராகம் : காமவர்த்தனி　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

பேரின்ப வடிவேலன் வருவான் – சித்திரைத்
தேரின் மீதமர்ந்தருள் தெவிட்டாமல் தருவான்

அனுபல்லவி

ஊரின் திருத்தவழும் உயர் திக்கரைத் தலத்தில்
பூரித் தமர்ந்தருளும் புண்ணிய மூர்த்தியவன்

சரணம்

அடியவர் அகம் நெகிழ அரோ ஹரா எனப்பாடி
வடிவேலன் பவனியை வாயார வாழ்த்துவர்
மிடிமையிருள் நீக்கி மிளிர்ந்தருள் செய்கந்தன்
கடிமலர் மணி கலகல எனஓடி　　41

# ஓடோடி வந்தான் கதிர்காமன்

ராகம் : ஸ்ரீ தாளம் : ஆதி

பல்லவி

ஓடோடி வந்தான் கதிர்காமன் – மயில்
மீதேறி வேலேந்தி மாதர்புடை சூழ

அனுபல்லவி

மாடோடி ஈசனின் மகனாம் குமரேசன்
நீடாழி யுலகினில் நிறை திக்கரை தனிலே

சரணம்

நீயே துணையெனவே நிழலை மனம் நாடி
வேலே கதியெனவே விம்மியழுதேன் குகன்
மேலேத்தும் மருமகன் மயில்வாகனன் பரன்
சேயே னெனக்கருள செகத்தில் திக்கரை தனில் 42

# பக்திக்கரை தனில்

ராகம் : தேஷ் தாளம் : ஆதி

பக்திக்கரை தனில் ஓர்படகு – அது
முத்திக்கரை காட்டும் வேல்முருகு
சித்திக்கரை பெறவே நீ அருகு – அந்தச்
சக்திவேல் நினைந்து நீர் பெருகு

முத்தமிழ்த் தேன்பருகும் முத்தழகு – அவன்
தித்தித்திடும் தமிழ் நீ பழகு
அத்திமுகத்தவன் அன்பழகு – முருகன்
இத்திக்கரைத் தலத்தின் இனியமுது

உள்ளந்தனில் இனிக்கும் உயர் அமுதம் – அவன்
உவகை கொண்டு சிரிக்கும் இதழ் குமுதம்
புள்ளி மயில்வேலன் அருள் புனிதம் – குற
வள்ளி கணவனைப் பாடுநிதம்

காரைநகர்க் களபூமி வாசன் – அவன்
சூரசம்மாரன் வேல் முருகேசன்
சீரைத்தரும் எழிற் சேந்தன் குமரேசன் – குகன்
பாரை ஆளும் அருள் திக்கரை வாசன்

செந்தமிழ்க் குருகும் கந்தன் – சோம
சுந்தரர்க் கருளும் மைந்தன்
சுந்தரி அபிராமி நந்தன் – தமிழ்
சந்ததம் மாந்தர விந்தன்

# அரவிந்த மலர்ப்பதம் தந்தான்

ராகம் : பைரவி தாளம் : ஆதி

பல்லவி

அரவிந்த மலர்ப்பதம் தந்தான் – கந்தன்
பிரபந்தத் தமிழ்பாட வந்தான் குகன்தான்

அனுபல்லவி

சரணமலர் அருளுவந்தான் சேந்தன்
புரமெனும் திக்கரை யுறையாது முகந்தான்

சரணம்

கையிலே வேலேந்திக் கலாபமயில் ஏறி
மையலார் வள்ளியும் மருவுகுஞ்சரி யோடு
ஐயனாம் முருகையன் அபயகரம் தூக்கி
வையக மீதிலே வளர் களபூமியதில் 44

# களபூமி வாழும் இளமுருகன்

ராகம் : ஸ்ரீரஞ்சனி தாளம் : ஆதி

பல்லவி

களபூமி வாழும் இளமுருகன் – கடம்பன்
வளமார்ந்த திருவடி வருந்துவாய் நல் நெஞ்சே

அனுபல்லவி

பழமேவும் குளிர்சோலை பரவுதிக்கரை தனில்
அழகான மயில்மீ தமரும் சிங்கார வேலன்

சரணம்

பூம்பதம் அருளும் புனிதன் ஷண்முக நாதன்
சாம்பசிவன் மைந்தன் சடாட்சரன் வேலவன்
மாம்பழச் சோலைமலி மருவு காரைநகர்
தீம்பதி கோவில் கொண்டு திருவருள் செய்பவன் 45

# திருவருள் நல்கிடும் திருக்குமரன்

ராகம் : வசந்த தாளம் : ஆதி

பல்லவி

திருவருள் நல்கிடும் திருக்குமரன் – பதம்
உருகி உருகி உள்ளம் உவந்துதுதி மனமே

அனுபல்லவி

பெருவரம் தருவான் பெருமான் முருகையன்
திருதிகழும் பதி திக்கரைக் குமரையன்

சரணம்

கந்தனின் கழலே கதியெனப் பிடித்தால்
வந்துனை ஆளுவான் வரங்களும் தருவான்
தந்தி முகத்தவன் தம்பியாம் கதிர்வேலன்
பைந்தமிழ் காரைக்கள பூமியில் உறைபவன் 46

# உறைந்துள்ளத்தில் நிறைந்தான்

ராகம் : ஆபோகி தாளம் : ஆதி

பல்லவி

உறைந்துள்ளத்தில் நிறைந்தான் உமைபாலன் அவன்
நிறைந்து வந்தருள் செய்தான் நிமலன் கதிர்வேலன்

அனுபல்லவி

சிறந்து மிளிர்ந் தோங்கும் சீலக் களபூமி
வளர்ந்து திக்கரைதனில் மிளிர்ந்திடும் கந்தசாமி

சரணம்

ஆறு முகங்களிலே அருள் அழகு பொலியும்
வீறுகொள் ஞானவேல் விளங்கிவரம் ஈயும்
ஏறு மயிலும் தோன்றும் எழில் குறவள்ளி தோன்றும்
கூறுதமிழ் தோன்றும் குஞ்சரியும் தோன்றும்

# குஞ்சரி குறவள்ளி காந்தன்

ராகம் : ஆபேரி தாளம் : ஆதி

பல்லவி

குஞ்சரி குறவள்ளி காந்தன் – கந்தன்
அஞ்சலென் றருள்வான் ஆறுமுகன் சேந்தன்

அனுபல்லவி

தஞ்சமென்றே அவன் தாளைப் பிடித்தவர்க்கு
மிஞ்சிடும் அருள்தனை மிளிர்ந்து சொரிபவன்

சரணம்

கழனி சூழும்காரைக் கவின் பதி திக்கரை
அழகு மலிய அருள் அன்புடன் தருபவன்
பழனி மலையாண்டி பாலசுப்ரமணியன்
கழலடி பாடுவாய் கலாபமயிலேறி வருவான் 48

# கலாபமயில் வாகனன்

ராகம் : ஹரிகாம்போதி தாளம் : ஆதி

பல்லவி

கலாபமயில் வாகனன் கனிந்து வந்தருளுவான்
நிலாப்பிறை யணிந்திடும் நீலகண்டன் புதல்வன்

அனுபல்லவி

உலாவிடும் கடலலை உமைபாலனைப் பாடும்
பலாகுலுங்கும் சோலைப்பதித் திக்கரை வாழும்

சரணம்

அன்பின் வடிவம் அவன் ஆறுமுகன் குகன்
இன்புறப் பேரின்பம் இறைஞ்சும் குமரேசன்
துன்புறுவார்துயர் துடைத்திடும் வடிவேலன்
பண்புதமிழ் வாழும் பதிக்கள பூமிவாசன் 49

# வாசமலர் தொடுத்து வடிவேலன் பதம் சூட்டு

ராகம் : ஸாவேரி தாளம் : ஆதி

பல்லவி

வாசமலர் தொடுத்து வடிவேலன் பதம்சூட்டு
பூசனைகள் செய்து புண்ணியம் நீ நாட்டு

அனுபல்லவி

நேசன் நிமலன் கந்தன் நீலாயதா க்ஷிபாலன்
ஈசன் புதல்வன் உன்றன் இன்னல்கள் தீர்த்திடுவான்

சரணம்

சரவணபவ எனும் சடாக்ஷர மந்திரம்
தரணியில் வேலேந்திக் கலாபமிவர்ந்து வந்தே
வரமருள் நல்குவான் வளர்திக்கரை வேலனை
சிரமதில் போற்றி சிந்தனை செய்வோம் 50

# வேலனைக் கூவிடுவாய் குயிலே

ராகம் : மணிரங்கு தாளம் : ஆதி

பல்லவி

வேலனைக் கூவிடுவாய் குயிலே
மாலவனின் மருகன் மயில்வாகனன் குகன்

அனுபல்லவி

காலனை உதைத்திட்ட காலகாலன் புதல்வன்
பாலசுப்ரமணியன் பதி திக்கரை வாழும்

சரணம்

வினை மடிக்கும் கைவேல் விரைந்தெடுத்தே வந்து
எனை ஆளுவாய் என எம்பிரானைக் கூவு
சுனை சூழும் களபூமிச் சுப்ரமணியன் பதம்
தனைப் பாடிப் போற்றுவாய் தண்டமிழ் பருகிடும் 51

# தண்டமிழ்த் தேனருந்தும் தண்டாயுதபாணி

ராகம் : கௌரிமனோஹரி தாளம் : ஆதி

பல்லவி

தண்டமிழ்த் தேனருந்தும் தண்டாயுதபாணி
வண்டமிழ்க் களபூமி வளர் திக்கரை ஸ்வாமி

அனுபல்லவி

பண்டாரமாக வந்து பழம் வேண்டிக் கோபங்கொண்ட
விண்டா மரைப்பழனி விளங்கும் திக்கரைக் கழனி

சரணம்

கண்டார் களிப்புறவே கலாப மயிலேறி
மண்டா மரைமலரும் மாபதிக்காரைநகர்
கொண்டேத்தும் கோயில் கொண்டுகுறை
தீர்க்க வந்தவன்
கண்தாரை பெய்ய அவன் கழலடி போற்றுவாய் 52

# போற்றி செய்வாய் மனமே

ராகம் : தர்பார் தாளம் : ஆதி

பல்லவி

போற்றி செய்வாய் மனமே – தினமே
நாற்றிசையும் புகழும் நாதன் ஷண்முகன் பதம்

அனுபல்லவி

வீற்றிருந்தே திக்கரை வியங் களபூமியதில்
தேற்றி யடிவர்க்குத் திருவருள் தருபவனைப்

சரணம்

வானவர் புகழ்ந்தேத்தும் வடிவேல் முருகமூர்த்தி
ஞானவே லேந்திடும் மோன நான் மறைக்கீர்த்தி
கான மயிலேறிக் குஞ்சரி வள்ளியுடன்
தீனர்க் கருளும் சிவ திருக்குமரனை வாழ்வில் 53

# திருக்குமரன் கையில் இருக்குது வீரவேல்

ராகம் : மாயாமாளவகௌள தாளம் : ஆதி

பல்லவி

திருக்குமரன் கையில் இருக்குது வீரவேல்
எதுக்கும் அஞ்சாதே எழில் வேல்துணை செய்யும்

அனுபல்லவி

அரக்கர் அகந்தையன்று தொலைத்த நல்ஞானவேல்
புரக்கும் திக்கரை வாழும் புண்ணிய மூர்த்தியாம்

சரணம்

வீரவேல் வாழ்வினில் வெற்றியும் தந்திடும்
சூரசம் மாரவேல் சித்தியும் நல்கிடும்
காரைநகர்க் களபூமியில் வாழும்வேல்
காலபயம் வென்று காத்திடும் கந்தனாம் 54

# கந்தன் மனமிரங்கி வந்தான்

ராகம் : பீம்பிளாஸ் தாளம் : ஆதி

பல்லவி

கந்தன் மனமிரங்கி வந்தான் – அருள்
எந்தன் வினையகலத் தந்தான் திக்கரைக்

அனுபல்லவி

மந்த மாருதம் வீசும் மன்னிடுவயல் தேயும்
சந்தத் தமிழ்மலரும் அந்தக் களபூமிக்

சரணம்

நற்றமிழ்த் தேன்பருகும் நாதன் கார்த்திகேயன்
பொற்பதம் தந்தருளிப் புகலிடமும் தருவன்
சொற்றமிழ் மலர்மாலை சூட்டி மகிழ்ந்திடுவாய்
கற்றவர் சூழ்ந்திடும் காரை நகர்ப்பதியில் 55

# காரைநகர்ப்பதிக்
# கவின் திக்கரை முருகன்

ராகம் : சுபபந்துவராளி தாளம் : ஆதி

பல்லவி

காரைநகர்ப்பதிக் கவின் திக்கரை முருகன்
தாளைப் பணி மனமே – தினமே

அனுபல்லவி

சூரசங்கார மூர்த்தி சுப்ரமணியன் குகன்
வீரவேல் ஏந்திடும் வேலன் அருள் தருவான்

சரணம்

முத்துக் குமரையன் சக்தி வடிவேலன்
பக்தி செய்யும் அடியார்பாபம் தொலைத்திடுவான்
சித்த மதில் நடம் செய்யும் சிவபாலன்
இத்தரணி மீதில் இலங்கும் குகநாதன்

# குகநாதனருள் கூடுமே

ராகம் : பெஹாக் தாளம் : ஆதி

பல்லவி

குகநாதன் அருள் கூடுமே – அவன்
இகமீதில் அமர்ந்தருள் இனிய தலம்பாடக்

அனுபல்லவி

மகமாயி அபிராமி மகன்வீர வடிவேலன்
செகமேழும் போற்றிடும் சேந்தன் கழல்பாடக்

சரணம்

தித்திக்கும் செந்தமிழில் திருவடி – பாடுவாய்
முத்துக் குமரனருள் சித்திக்குமே புவியில்
கத்தும் திரைகடல் சூழ் கவின் காரைக் களபூமி
அத்திக்கரை வாழும் ஆறு முகனைப் பாடக் 57

# ஆறுமுகம் இருக்க அஞ்சுவதேன் மனமே

ராகம் : தேவகாந்தாரி தாளம் : ஆதி

பல்லவி

ஆறுமுகம் இருக்க அஞ்சுவதேன் மனமே
வீறு நிறைந்த வெற்றி வேலன் தருவானன்றோ

அனுபல்லவி

சீறும் அசுரர்குலம் வீணகந்தை தொலைத்த
நீறு தவழும் நெற்றி நிமலன் திக்கரை தனில்

சரணம்

வாரி வாரி அருளை வழங்கும் வடிவேலன்
கூரிதழ் வேலிருக்கக் கொடுவினை சேராதே
பாரில் அழகுவயல் சூழும் காரைநகர்
ஊரில் களபூமி உத்தமனாம் கந்தன் 58

# கந்தன் கழலே கதி

ராகம் : காபி தாளம் : ஆதி

பல்லவி

கந்தன் கழலே கதி – மனமே
உந்தன் வினையகற்றி உயர்வாழ்வு நல்கிடும்

அனுபல்லவி

செந்தமிழ் ஓங்கிடும் செழுநகர்த் திக்கரை
வந்தமர்ந்தருள் தரும் வடிவேலன் சிவபாலன்

சரணம்

அம்புயப் பதமலர் அனுதினமும் துதிப்பாய்
வெம்பவ வினைகளை வேரறுப்பான் குமரன்
சம்பன் மகன் குகன் சாம்பவியின் புதல்வன்
உம்பர் தொழும் சீலன் உயர்மறையின் முதல்வன் 59

# உயர்மறை போற்றிடும் உத்தமனே

ராகம் : திலங் தாளம் : ஆதி

## பல்லவி

உயர்மறை போற்றிடும் உத்தமனே – முருகா
ஜெயமருள் நிறை ஞானதத்துவனே சரணம்

## அனுபல்லவி

வயலெழில் சூழ்ந்திடும் வளநகர் திக்கரை
நயமுடன் அமர்வள்ளி நாயகனே அபயம்

## சரணம்

இச்சை ஞான கிரியா சக்தியொடு விளங்கும்
பச்சை மயில் ஏறும் பாலசுப்ரமண்யா
மெச்சிடும் செந்தமிழ் மேலவர் சூழ்ந்திடும்
இச்செகம் புகழ் காரை இன்பமாய் வளர்ந்திடும் 60

# வளரருள் களபூமி வாசன்

ராகம் : வாரணி தாளம் : ஆதி

பல்லவி

வளரருள் களபூமி வாசன் – முருகேசன்
மிளிரருள் மிகும் குமரேசன் நேசன்

அனு பல்லவி

உளமதில் உறை கார்த்திகேயன் சீலன்
வளமிகு திக்கரை பதிச் சிவபாலன்

சரணம்

பன்னிரு கையன் பாலசுப்ரமண்யன்
என்னிருகண் நிறை எழில் லாவண்யன்
பன்னிடும் புகழ்மலி பரனருள் புண்யன்
மின்னிடும் வேலேந்தும் மோகனக் கண்ணன் 61

# மோகனக் கண்காட்டி முறுவல் செய்தான்

ராகம் : மோகனம் தாளம் : ஆதி

பல்லவி

மோகனக் கண்காட்டி முறுவல் செய்தான் – மயில்
வாகனத்தில் முருகன் வள்ளி குஞ்சரியோடு

அனுபல்லவி

நாகபூஷணி மைந்தன் நகர்த்திக்கரை நாதன்
தேகம் புல்லரித்திடத் தோன்றி என்முன் வந்து

சரணம்

அஞ்சல் என அவன் அபய கரம் காட்டி
மிஞ்சும் அருள் தந்தே மிளிர்தமிழும் தந்தான்
தஞ்சம் என்றே குகன் தாளைப் பிடித்தேன் அவன்
செஞ்சதங்கை கொஞ்ச செகத்தில் நடம்புரிந்தான் 62

# நடம் புரியும் மயில் நாதன்

ராகம் : ஆனந்தபைரவி தாளம் : ஆதி

பல்லவி

நடம்புரியும் மயில் நாதன் – வேலன்
கடம்ப மலரணியும் மார்பன் பொற்பாதன்

அனுபல்லவி

விடமணி கபாலியின் மைந்தன் திக்கரை
இடம்வளர் கதிர்காமன் கந்தன்

சரணம்

சரண மலரருளும் ஷண்முக மூர்த்தி
மரண பயமகற்றும் சரவணபவ பூர்த்தி
தரணியில் தமிழ்பாடு தண்ணருள் கீர்த்தி
வரமருளும் அவனும் கருணையின் சீர்த்தி 63

# கருணையின் கீர்த்தியே கந்தன்

ராகம் : பூர்ண சந்திரிகா தாளம் : ஆதி

## பல்லவி

கருணையின் கீர்த்தியே கந்தன் – அவன்
திருவருள் தருவான் திரிசூலி மைந்தன்

## அனுபல்லவி

திருவளர் திக்கரை முருகனும் வருவான்
பெருமைத் தமிழ்கேட்டுப் பேரின்பம் தருவான்

## சரணம்

குருவடி வானவன் குமரகுருபரன்
அருள்வடி வானவன் ஆறுமுகன் பரன்
மருவிடும் குஞ்சரி வள்ளி மணவாளன்
அருவியாய்த் தமிழதைச் சொரியவே வைத்தவன் 64

# சொரியக் கண்ணீர் வழியச் சோதியைப் பாடு

ராகம் : முகாரி தாளம் : ஆதி

பல்லவி

சொரியக் கண்ணீர் வழியச் சோதியைப் பாடு
அரியவேல் அருள் தரும் அவனுக்கேது ஈடு

அனுபல்லவி

துரிய வேல்வினையைத் துடைத்திடும் வாழ்வில்
பெரியதோர் நிலைதந்து பேரின்பம் நல்கும்

சரணம்

திக்கரை நற்றலம் தினம்துதி பாடுவாய்
எக்குறை வரினும் நிற்காது ஓடுமே
திக்குகள் போற்றிடும் தீன தயாபரன்
அக்குரு பரனடி அடைந்திடு நெஞ்சமே 65

# நெஞ்சமதில் உறைந்த செஞ்சரணன்

ராகம் : அமிர்தவர்ஷனி தாளம் : ஆதி

பல்லவி

நெஞ்சமதில் உறைந்த செஞ்சரணன் – முருகன்
கஞ்சவடிப் பாதம் தஞ்சமருள் அபயம்

அனுபல்லவி

மிஞ்சும் எழில் மலியும் மிளிர் திக்கரை தனிலே
விஞ்சி வள்ளி குஞ்சரி கொஞ்சிடும் குமரன்தாள்

சரணம்

பதுமத் திருவடிகள் பாடித் துதிமனமே
மதுமலர்ச் சேவடிகள் மன்னும் அருள்தருமே
மெதுமலர் கமழ்ந்திடும் மேலான காரைநகர்
புதுக்கள பூமியதில் பொலிமுரு கையன்கழல் 66

# முருகையன் அருள் தன்னை நாடு

ராகம் : ரீதிகௌள  தாளம் : ஆதி

பல்லவி

முருகையன் அருள் தன்னை நாடு – மனமே
திருதிகழ் திக்கரைப் பெருமான் சிவபாலன்

அனுபல்லவி

இருகைகள் கூப்பி நீ இன்பத் தமிழ்பாடு
அருளை அள்ளி அள்ளி அவன் நல்கும் கண்கூடு

சரணம்

எல்லாம் அவன் செயல் எங்கும் அவன் அருள்
நல்லாசி யாவுமே நாதன் குகன் கருணை
வல்யானை மணவாளன் வள்ளி மாதின் லோலன்
தொல்மா பதிக்கரை துலங்கும் களபூமி 67

# களபூமித்
# திக்கரைக் கடம்பன்

ராகம் : யமுனாகல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

களபூமித் திக்கரைக் கடம்பன் – அருள்
வளமார நல்குவான் வாயாரப் பாடுவாய்

அனுபல்லவி

இளமாதர் புடைசூழ அழகான மயில்மீதில்
புளகாங் கிதங்கொள்ளப் புன்னகை பூத்திடும்

சரணம்

சரணார விந்தத்தைச் சந்ததம் நீதுதிப்பாய்
வரமீயும் வடிவேலன் வந்தருள் தந்திடுவான்
கரமாடும் கதிர்வேலும் கலாபமும் துணைசெய்யும்
புரமாதலக் காரை புகழும் செந்தமிழ் முருகன் 68

# செந்தமிழ் முருகனைச் சேர்ந்திடுவாய்

ராகம் : மலயமாருதம் தாளம் : ஆதி

பல்லவி

செந்தமிழ் முருகனைச் சேர்ந்திடுவாய் – நெஞ்சே
கந்தன் கடம்பனைக் கார்த்திகேயனைப் பாடிச்

அனுபல்லவி

வந்தனை செய்பவர் வல்வினை தீர்த்திடுவான்
சிந்தனைச் செல்வமும் சேர அருள் செய்வான்

சரணம்

நம்புவர்க் கெளியன் நாதன் ஷண்முகன் குகன்
சம்புவெழிற் குமரன் சாம்பவியின் புதல்வன்
நம்வினை தீர்ப்பவன் நளினி செம்பொற் பாதன்
அம்புவித் திக்கரை அழகன் அமுதன் பவன் 69

# அழகன் அமுதன் ஆறுமுகன்

ராகம் : வலஜி தாளம் : ரூபகம்

பல்லவி

அழகன் அமுதன் ஆறுமுகத்தன்
குழகன் குமரன் குஞ்சரி நாதன்

அனுபல்லவி

பழமுதிர்ந்திடும் பதி திக்கரைவாழ்
பழனியாண்டி பதம் தந்தருள்வான்

சரணம்

தண்டமிழ் பாடித் தாளைத் தொழுவாய்
அண்டரும் போற்றும் அரியின் மருகன்
கண்டவர்க் கினியுன் காரைக் களபூமி
கொண்டவன் முருகன் கூர்வடி வேலவன் 70

# கூர்வடி வேலனைப் பார்வதி பாலனை

ராகம் : தேவகாந்தாரி தாளம் : ஆதி

பல்லவி

கூர்வடி வேலனைப் பார்வதி பாலனைப்
பார்தனிலே பணிந்து பதம் தொழுவாய் மனமே

அனுபல்லவி

கார்மேக வண்ணனின் கனிந்த மருமகன்
சீர்மேவு திக்கரை சிறந்தருள் செய்பவன்

சரணம்

அடியவர்க் கினியவன் ஆறுமுகத்தவன்
மிடியெலாம் நீக்கவே மிளிர்வேல் அருள்பவன்
கடிகண பதியவன் கருணை யிளையவன்
கொடியதில் கோழியைக் கொண்டவன் குருபரன் 71

# குருபரனின் திருவடிகள் போற்று

ராகம் : நடைபைரவி தாளம் : ஆதி

பல்லவி

குருபரனின் திருவடிகள் போற்று – முருகன்
பெருவருளே புவியதனில் பெருந்து ணையாய்க் காக்கும்

அனுபல்லவி

திருவுறையும் பதியான திக்கரையில் கோவில் கொண்டு
பெருவுலகில் அடியவர்க்குப் பேரின்பம் தரவுறையும்

சரணம்

திருமுருக குக சரணம் திகழுமெழில் வேலழகா
அருமறைகள் புகழ்ந்தேத்தும் அருணகிரித் தமிழழகா
பெருமானே துணையெனவே பெருவடிகள் சரணடைவாய்
முருகனவன் மனமகிழ்ந்து முத்தியின்பம் தானருள்வான் 72

# முத்தியின்பம் நல்கும் முத்துக் குமரையன்

ராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி

முத்தியின்பம் நல்கும் முத்துக் குமரையன்
சக்திவேல் முருகனின் சரணமலர் துதிப்பாய்

அனுபல்லவி

தித்தித்திடும் தமிழில் திக்கரை முருகனைப்
பக்தியுடன் பாடிப் பாதமலர் தொழுவாய்

சரணம்

சஞ்சலம் தீர்த்திடும் சரவணன் கைவேல்
அஞ்சலென அருளும் ஆறுமுகனின் வேல்
மிஞ்சிடும் எழில்நிறை மிளிர்ந்திடு வீரவேல்
தஞ்சமென் றடைந்தவர் தாபம் தீர்த்திடும் வேல் 73

# வேல்முருகன் குமரன்

ராகம் : வாசஸ்பதி தாளம் : ஆதி

பல்லவி

வேல்முருகன் குமரன் விளங்கு திக்கரை வாசன்
மால்மருகன் அழகன் மலரடிபோற்று நெஞ்சே

அனுபல்லவி

நால்மறை ஏத்துகின்ற நாதன் ஷண்முக வேலன்
சேல்தவழு களபூமிக் காரைநகர்

சரணம்

பாதார விந்தமலர் நீதா முருகா என
ஆதார மாகி அவன் ஆனந்தம் தந்தருள்வான்
மாதாபிதா குரு தெய்வமெனத் துதித்தால்
வேதாசலம் மருகன் வேண்டும் அருள் நல்கும் 74

# வேண்டுவார் வேண்டியதை விரும்பித் தரும் சீலன்

ராகம் : ஸரஸ்வதி தாளம் : ஆதி

## பல்லவி

வேண்டுவார் வேண்டியதை விரும்பித் தரும் சீலன்
தூண்டு சுடரனைய ஜோதி திக்கரை வேலன்

## அனுபல்லவி

ஆண்டு உனக்கு அருள் - அள்ளி அள்ளித் தருவான்
பூண்டுமலர் மாலைப் புனிதன் ஓடி வருவான்

## சரணம்

மயிலதனில் ஏறி மாதர் இருவருடன்
அயிலொரு கையேந்தி அழகுக் கொடியு மேந்திப்
பயிலும் தமிழ்பாடிப் பக்குவ மார்க்கம் காட்டி
சயிலம் எறிந்தவேலன் சரணம் தரவருவான் 75

# வானவர் போற்றிடும் ஞானக் குருபரன்

ராகம் : மாண்டு தாளம் : ஆதி

### பல்லவி

வானவர் போற்றிடும் ஞானக் குருபரன்
மோனப் பதம் பாடுவாய் – மனமே

### அனுபல்லவி

தீன தயாபரன் திக்கரை வாழ் முருகன்
கானக் குறவள்ளி குஞ்சரி நாயகன்

### சரணம்

சிந்தனைச் செல்வமும் சிறந்தருள் நல்கிடும்
கந்தனைப் பாடியே கழலடி போற்றுவாய்
வந்துனை ஆளுவான் வடிவேலன் குகன்
பைந்தமிழ் காரைக் களபூமியில் வளர்பவன் 76

# பவம் நீக்கும் சரவணபவ ஷண்முகன்

ராகம் : ஹமிர்கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

பவம் நீக்கும் சரவணபவ ஷண்முகன் – குஹன்
சிவபாலன் சேவடிகள் சேவித்திடுவாய் நெஞ்சே

அனுபல்லவி

தவம் நிறைதிருப்பதி புவனியில் திக்கரை
தலம் வளரும் வேலன் தாளைத் துதித்திடுவாய்

சரணம்

பிறவிப் பிணியறுக்கும் பிடித்த வினையகற்றும்
அறவழி அருள்தரும் ஆனந்தச் செவ்வடிவேல்
குறமகள் குஞ்சரியும் குலாவிடும் திருமுருகன்
மறமதை நீக்கிடுமே மயில்வாகனன் வேலன் 77

# வேலன் பதம் நாடு மனமே

ராகம் : சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி

வேலன் பதம் நாடு மனமே – சிவ
பாலன் திக்கரை வாழ் சீலன் முருகனாம்

அனுபல்லவி

மாலின் மருமகன் மாரியம்மை மகன்
சேலின் விழிவள்ளி தெய்வானை காதலன்

சரணம்

நீலத் திரைக்கடல் சூழும் காரைநகர்
கோலத் திருக்கோயில் கொண்ட குருபரன்
சீலக் களபூமி திக்கரைச் சண்முகன்
நீல கண்டன்மகன் நித்திய பூரணன் 78

# நித்திய பூரணனை நினைநெஞ்சே

ராகம் : புன்னாகவராளி தாளம் : ஆதி

பல்லவி

நித்திய பூரணனை நினை நெஞ்சே – வாழ்வில்
சத்திய ரூபனாம் சரவண பவனான

அனுபல்லவி

கத்தும் கடல் சூழும் கவின் திக்கரை வாழும்
முத்துக் குமரையன் சக்தி வடிவேலன்

சரணம்

சந்ததம் கந்தனைச் செந்தமிழ் பாடியே
வந்தித்துத் துதிசெய்வாய் வரம்தர வந்திடுவான்
மந்திர மாமறை மன்னும் உருவான
சுந்தர ரூபனை வந்தனை செய்து நீ 79

# நீணில வாழ்வினில் நீயே துணை முருகா

ராகம் : ஸிம்மேந்திரமத்யமம் தாளம் : ஆதி

பல்லவி

நீணில வாழ்வினில் நீயே துணை முருகா
ஆணிப் பொன்னம்பலவன் அருமை மகனே என்றும்

அனுபல்லவி

வேணி யபிராமி விரும்பிடும் பாலகனே
தோணித் துறைப் பாரைத்திக்கரை வளர்குகனே

சரணம்

அய்யனே குமரா ஆறுமுகா கடம்பா
துய்யனே தூயவா துணைநின் சரணமலர்
மெய்யனே விமலா மேலவனே நிமலா
வைையக மீதில் களபூமிக் கதிர்காமா 80

# கதிர்காமன் கழலடிகள் கருத்திருத்து

ராகம் : ஆரபி தாளம் : ஆதி

பல்லவி

கதிர்காமன் கழலடிகள் கருத்திருத்து – மனமே
மதிசூடும் அரன்மைந்தன் மயில்வாகனன் பவன்

அனுபல்லவி

கதிர் ஆடுமயில் மீது சதுர்மறைகள் போற்றக்
குதியோடு ஆடிவரும் குமரன் ஷண்முகவேலன்

சரணம்

சிந்தையில் கந்தனை நிதம் இருத்தி நீயும்
வந்தனை செய்குவாய் வண்டமிழ் பாடுவாய்
வந்துனை ஆளுவான் வரங்களும் நல்குவான்
செந்தமிழ்க் களபூமி செழித்து வாழ் வடிவேலன் 81

# வாழ்வு தரும் வடிவேல்

ராகம் : ஹிந்துஸ்தான்காபி தாளம் : ஆதி

## பல்லவி

வாழ்வு தரும் வடிவேல் உண்டு – உனக்குத்
தாழ்வு மனப்பான்மை தரணியில் ஏன் மனமே

## அனுபல்லவி

சூழ்கடல் ஒலித்திடும் சோபனத் திக்கரை
வாழ்முரு கேசனும் வண்டமிழ் கேட்டுமே

## சரணம்

ஆறுபடை வீடும் அழகு களபூமி
கூறுமொரு வீடாய்க் கொண்டுறையும் வேலன்
தேறுமொழி சொல்லி தேனருளும் தருவான்
வீறுடை வேலேந்தி வெவ்வினை தானழித்து 82

# வெவ்வினை களைந்திடும் வேலவன்

ராகம் : பஹீதாரி  தாளம் : ஆதி

பல்லவி

வெவ்வினை களைந்திடும் வேலவன் – முருகன்
செவ்விதழ் சேவடி சேர்ந்திடுவாய் மனமே

அனுபல்லவி

அவ்வையின் அகவலில் அமுதம் மகிழ்ந்தவன்
கொவ்வையின் செவ்விதழ் குழியச் சிரித்தவன்

சரணம்

தமிழிசை கேட்டவன் தணல் மெழுகாயுருகி
அமிழ்தமாம் தன்னருள் அள்ளி அள்ளித்தருவன்
கமழ்வயல் சூழ்ந்திடும் காரைத்திக்கரை வாழும்
புகழ்நிறை புண்ணியன் புனித வேல் ஏந்தியே 83

# வேலேந்தி விளையாடி வந்தான்

ராகம் : பாகேஶ்ரீ தாளம் : ஆதி

பல்லவி

வேலேந்தி விளையாடி வந்தான் – கந்தன்
மாலேத்தும் மருமகன் மாபதி திக்கரையில்

அனுபல்லவி

கோலேந்திப் பழனியில் கோவண ஆண்டியாய்
நூலேத்த நின்றவன் நுண்கலை நுகர்பவன்

சரணம்

இன்னிசைக் குருகுவான் இனிய தமிழ் மாந்திப்
புன்னகை புரிந்தவன் புளகாங்கிதம் கொள்வான்
தன்னிரு மலரடி தந்து எமைக் காப்பான்
பன்னிரு கையனாம் பராபரையின் புதல்வன் 84

# பராபரை புதல்வன் பாலசுப்ரமணியன்

ராகம் : ஸாரங்கா                                   தாளம் : ஆதி

பல்லவி

பராபரையின் புதல்வன் பாலசுப்பிரமணியன்
தராதலந்தனில் காரைத் தலத்திக்கரை வாசன்

அனுபல்லவி

சுராசுரர் பணிந்திடும் சுகுண மனோஹரன்
அராவணை துயிலுமால் அரியின் மருமகன்

சரணம்

அருவியெனத் தமிழ் பருகிடத் தந்தவன்
திருவிளங்கும் காரை திக்கரை உறைபவன்
மருவிடும் குஞ்சரியும் குறமகள் மகிழ்பவன்
முருகு தவழ் ஞான முதிர்ச்சியில் முதல்வன் 85

# ஞானமுதிர்ச்சி நல்கும் நாயகன்

ராகம் : ஹம்ஸநாதம் தாளம் : ஆதி

பல்லவி

ஞானமுதிர்ச்சி நல்கும் நாயகன் – முருகன்
கானமயில் அமரும் கந்தன் கடம்பன் குகன்

அனுபல்லவி

தேனமுதான தமிழ்க் கானந் தனைப் பருகும்
மோனத்தமிழ் அழகன் முகுந்தன் மருமகன்

சரணம்

சுந்தரி யபிராமி மைந்தனாம் ஷண்முகன்
வந்தணைந் தேவளம் தந்த திக்கரை நாதன்
தந்திடுவான் அருள் தண்டமிழ்க் குருபரன்
செந்தமிழ்க் காரைநகர் சேந்தன் வெற்றிவேலன் 86

# வெற்றிவேல் முருகனின் பொற்றிருப் பதமலர்

ராகம் : மோகனம் தாளம் : ஆதி

பல்லவி

வெற்றிவேல் முருகனின் பொற்றிருப் பதமலர்
பற்றிடுவாய் மனமே – தினமே

அனுபல்லவி

எற்றி எறிந்திடுவான் முற்றிய வெவ்வினைகள்
நற்றிருத் தாமரை உற்றதுணை தருவான்

சரணம்

தேவரும் மூவரும் தேனருளை வேண்டி
ஆவலாய் பூஜித்த அம்புஜமலர்ப் பாதன்
கூவிடும் கோழியைக் கொடியாய்ப் பிடித்தவன்
பூவில் திக்கரை தன் புன்னகை புரிபவன் 87

# புன்னகை புரிந்தான் என்னையன்

ராகம் : கீரவாணி தாளம் : ஆதி

பல்லவி

புன்னகை புரிந்தான் என்னையன் – புவியில்
மன்னிடு திக்கரை மாபதி அமர்ந்திருந்து

அனுபல்லவி

கன்னி வள்ளியொடு கவின் குஞ்சரி சூழ
வண்ண மயிலிலேறி வண்டமிழிசை பருகிப்

சரணம்

கன்னல்தமிழ் கேட்டுக் கருணை மிகவாகி
அன்னவன் கவியமுதை அள்ளி அள்ளித் தந்தான்
என்னருங்கண் நிறைந்தான் ஏரம்பன் சோதரன்
முன்னம் நக்கீரனவன் முதுதமிழ் உண்டவன் 88

# தமிழ் உண்ட தங்கவேல் துணை

ராகம் : தேஷ் தாளம் : ஆதி

பல்லவி

தமிழ் உண்ட தங்கவேல் துணையிருப்பான்
அமிழ்தான தன்னருள் அள்ளித் தருவான் – அவ்வை

அனுபல்லவி

கமழும் மலர்கள் சூழும் காரைக் களபூமி
அமரும் திக்கரை வேலன் ஆறுமுகத்தவன்

சரணம்

தேனினும் பாலினும் தெவிட்டாத தீந்தமிழ்
கானமிசைத் தாலவன் கசிந்துருகி வருவான்
மானின் மகள் வள்ளி மருவுகுஞ்சரி காந்தன்
வானின் அமுதமென வாரி அருள் தருவான் 89

# வாரித் தமிழ் தரும் வாரிதியே

ராகம் : ஸிந்துபைரவி தாளம் : ஆதி

பல்லவி

வாரித் தமிழ்தரும் வாரிதியே ஆதரி
கூரிதழ் வேலேந்தும் குமரகுரு பதியே

அனுபல்லவி

ஊரில் திகழ் காரை உயர்களபூமியதில்
நாரி யிருவருடன் நயந்தருளும் முருகா

சரணம்

நின்மலர்ச் சேவடி நினைந்து நினைந்து பாடிக்
கன்னல் தமிழ் சூட்டக் கனிந்து நீ வாராயோ
மன்னும் திக்கரை வாழும் மயில்வாகனா குகனே
இன்னமும் தாமதம் ஏனோ தயாபரா 90

# ஏனோ தயாபரா இம்மௌனம்

ராகம் : தோடி தாளம் : ஆதி

பல்லவி

ஏனோ தயாபரா இம்மௌனம் – முருகா
வானோர் துதிக்கும் வடிவேலனே கண்பாராய்

அனுபல்லவி

தேனோ கனிரஸமோ தெவிட்டாத செந்தமிழோ
நானோ மனங்கனிந்து நாடி உனை அழைத்தால்

சரணம்

பக்திப் பரவசத்தால் பித்துப் பிடித்ததுபோல்
கத்திக் கதறிநானும் கந்தா முருகா என்றேன்
எத்தனை சொன்னாலும் தித்திக்குமே தமிழ்
அத்தமிழ்க் குருகிடும் ஆறுமுகா என்றால் 91

# என்றாலும் என்குலத் தெய்வமன்றோ

ராகம் : ஸாருகேஸி தாளம் : ஆதி

பல்லவி

என்றாலும் என்குலத் தெய்வமன்றோ – முருகா
குன்றாடும் குமரனே குகனே குருபரனே

அனுபல்லவி

மன்றாடும் மஹாதேவன் மகனே சிவபரனே
வென்றாடும் வீரவேல் நின்றாடும் சரவணனே

சரணம்

நின்னை யன்றிக்கதி நிலத்தில் எவருமுண்டோ
பன்னிரு கையனே பரிந்தருள் தாராயோ
அன்னை அபிராமி அருமைப் புதல்வனே
கன்னல் தமிழ்திக்கரை கனிந்து அருள்பவனே 92

# கனிந்து அருள் செய்யக் கந்தன் வந்தான்

ராகம் : லதாங்கி தாளம் : ஆதி

பல்லவி

கனிந்து அருள் செய்யக் கந்தன் வந்தான் – கண்கள்
பணிந்து நீர்மல்கிட பரவசத்தால் நின்றான்.

அனுபல்லவி

நினைந்து நினைந்துருகி நிமலா ஷண்முகா என்று
பணிந்து இறை பாடப் பாலசுப்ரமணியன்

சரணம்

சிவனுக் குபதேசித்த சுவாமி நாதன் குகன்
அவனியில் களபூமி அழகு திக்கரை வாசன்
புவனியில் செந்தமிழ்ப் புண்ணியன் கண்ணியன்
தவநிறை தண்டமிழ் தண்ணிசை பாடிடக்

# இசைபாட
# இன்னருள் சுரந்தான்

ராகம் : ஹேமவதி தாளம் : ஆதி

பல்லவி

இசைபாட இன்னருள் சுரந்தான் – சேந்தன்
அசைமா மயிலேறி அழகு திக்கரை வந்தான்

அனுபல்லவி

திசையாவும் போற்றிடத் தீந்தமிழ் வளர்ந்திடும்
இசைமேவும் இன்னகர் இலங்கு களபூமியதில்

சரணம்

பன்னிரு கரங்களும் பரிந்து நல்லாசி நல்கக்
கன்னி வள்ளியும் காதல் குஞ்சரியும் மகிழ
வண்ண மயில் ஆட வடிவேலும் கொடியாட
என்னிரு கண்களும் என்றும் நிறைந்து நின்று 94

# என்றும் நிறைந்திடும் எழிற்சுடரே

ராகம் : பாகேஸ்ரீ தாளம் : ஆதி

பல்லவி

என்றும் நிறைந்திடும் எழிற்சுடரே – முருகா
வென்று தரும் வீர வேலனே அருள்

அனுபல்லவி

அன்று அரக்கர்குல அகந்தைதனை அழித்தாய்
குன்று தோறும் நீயே நின்று அருள் செய்தாய்

சரணம்

அன்பொடு பூசனை அனுதினமும் செய்தேன்
இன்புற நின்னருள் இரங்கி நீ தாராயோ
நன்புகழ் மிளிர்காரை நற்பதி திக்கரை
மன்பதி வாழ்பவனே மலரடியே தருவாய் 95

# மலரடி தருவாய் மயில்வாகனா

ராகம் : சங்கராபரணம் தாளம் : ஆதி

பல்லவி

மலரடி தருவாய் மயில்வாகனா – உன்றன்
அலகிலாப் புகழதை அழகு தமிழிற் பாட

அனுபல்லவி

உலகினில் தமிழ் மிளிர் உயர் காரைக் களபூமித்
தலமுறை திக்கரை தனில் நிதம் வாழ்பவனே

சரணம்

சரணம் தர உனக்கு மனமில்லையா முருகா
சரணம் சரணமென்று கதறுவ தறியாயோ
வரமருளி நல்ல வாழ்வருளும் வேலா
மரகத மயிலேறி மகிழ்ந்து வந்தே நீயும் 96

# வந்தே நீ எனை ஆள்

ராகம் : சக்கரவாகம் தாளம் : ஆதி

பல்லவி

வந்தே நீ எனை ஆள் – முருகவேள்
செந்தாமரைப் பதம் சேவிக்க வரம் தந்தே

அனுபல்லவி

செந்தேனும் செந்தமிழும் சிறந்து மிளிர் திக்கரை
வந்தாறு முகாவுன்றன் வண்டமிழ் பதந்துணையே

சரணம்

தித்திக்கும் செந்தமிழ் தேனிருக்கு உன்றன்
பக்தி சேர் பாதாரம் பரிந்திருக்கு கந்தன்
சித்திசேர் நற்றமிழ் இசையிருக்கு நானும்
இத்தரை மீதிலே இன்பமா யுனைப்பாட 97

# உனைப்பாட வரம் தருவாய்

ராகம் : சஹானா                    தாளம் : ஆதி

பல்லவி

உனைப்பாட வரந்தருவாய் கந்தா
நினைப்பாடி நெக்குருகி நீழலின் பம்பெற

அனுபல்லவி

சுனைசூழும் களபூமி தனில் மேவும் திக்கரை
தனைநாடி வந்துறைந்த தண்டமிழ்த் – தெய்வமே நான்

சரணம்

உள்ளம் உருகித் தமிழ் உவந்துனைப் பாடிப் பாடித்
தெள்ளு தமிழ்ப்பாடல் தெவிட்டாமல் பாட அருள்
வள்ளி மணவாளா வனிதை குஞ்சரி நாதா
அள்ளி அருளை நீதா அழகு மங்களம் நீதா! 98

# மங்களம் நீ தா

ராகம் : மத்தியமாவதி தாளம் : ஆதி

பல்லவி

மங்களம் நீதா மலரின் பொற் பாதா
தங்கவேல் நாதா தண்டமிழ்த் தேவா

அனுபல்லவி

அங்கயற் கண்ணி அம்பிகை புதல்வா
சங்கரன் மகனே ஷண்முக நாதா

சரணம்

திக்கரை முருகா தீன தயாபரா
சக்கர பாணிச் சதுரன் மருகா
நற்களபூமி சற்பதி நாயகா
சொற்றமிழாலே சொரிந்துனைப் பாட 99

# பாடிடுவேன் மங்களம்

ராகம் : சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி

பாடிடுவேன் மங்களப் பாட்டு – வேலன்
நாடி வந்தருளுவான் நந்தமிழிசை கேட்டு

அனுபல்லவி

ஆடிடும் மாமயில் அமர்ந்த வடிவேலன்
கூடிடும் திக்கரைக் கோவில் கொண்ட நாதனைப்

சரணம்

மஞ்சள் குங்குமம் பொங்கிட அருள்பவன்
தஞ்ச மடைபவர்க்குத் தண்ணருள் தருபவன்
அஞ்சல் என அபயம் அடியார்க் கருள்பவன்
கஞ்ச மலர்சூழும் காலைக் களபூமியானைப்

இலண்டன்

# சுடரொளி

**சுடரொளி** – தமிழ், சமய, இலக்கிய, கலை, கலாச்சார, தமிழ் அறிஞர்களின் வரலாற்றுப் பதிவு போன்றவற்றைத் தாங்கி இலண்டனில் இருந்து இரு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் சர்வதேசச் சஞ்சிகை.

**சுடரொளி** – ஈழ, இந்திய, சிங்கப்பூர், மலேசியத் தமிழர்கள் உள்பட உலகளாவிப் பரந்து வாழும் தமிழ் மக்களின் கலாச்சார இணைப்புப் பாலமாக விளங்குகிறது.

**சுடரொளி** – தமிழர்கள் வசிக்கும் உலக நாடுகள் பலவற்றில் விநியோகமாகிறது. சந்தாதாரர்களும் உள்ளனர்.

**சுடரொளி** – பல நூல் நிலையங்களைச் சென்றடைகிறது. இது ஒரு காத்திரமான இலக்கிய ஏடு. பாது காத்துப் பேணவேண்டிய அறிவுப் பொக்கிஷம்.

**சுடரொளி** – இன்னும் சிறப்பாக வெளிவர உங்களுடைய ஆதரவு தேவை. சந்தாதாரர்களாகவோ அல்லது உங்களுக்குப் பிடித்த வேறு வழிகளிலோ ஆதரவு தந்து உதவுங்கள்.

ஆசிரியர்கள் :

**பொன். பாலசுந்தரம்** **ஐ.தி. சம்பந்தன்**

தொடர்புக்கு :

**CHUDEROLI PUBLICATION SOCIETY**
15, RUTLAND ROAD; LONDON E7 8PQ,
UNITED KINGDOM

**CHUDEROLI PUBLICATION SOCIETY**
30, St. BENEDICT MAWATHA, COLOMBO, SRI LANKA.

திக்கரை முருகன் திருவருளைப்பெற
உங்களை அன்புடன் அழைக்கிறோம்!

# GLOBAL EXCHANGE LTD

SMART money

**Money Transfers To Sri Lanka**
**Send Now Collect Within 24 Hours**

Via Commercial bank branches islandwide

We also offer instant cash service worldwide

No bank a/c needed, collect your cash with ID & PIN No.

No remittance charges over £125 to Sri Lanka

No handling charges or hidden charges in Sri Lanka

We credit to all banks in Sri Lanka

**Excellent Rates, Excellent Service**

Why not try us
Global Exchange Ltd
Part of S.V.M Group
Of Companies
More than 60 years in business
Pioneers of worldwide money transfer

Do yourself a favour by sending money through this most trusted reliable and efficient way

**Tel: 020 8902 3366**
**Fax: 020 8902 9922**

Global Exchange Ltd
54 Ealing Road,
Wembley,
Middlesex HA0 4TQ

Global Exchange Ltd
1081, Garrat Lane, Tooting
London SW17 0LN
020 8696 1022